விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 21 வியாழக்கிழமை (07.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 353

## இரா.சம்பந்தனின் எதிர்க்கட்சி தலைவர் பதவி பறிப்பு?

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விட்டு வெளியேறிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க முன்வரும் பட்சத்தில் 23

## பதவியை பாதுகாக்க பங்காளி கட்சியுடன் சம்பந்தன் பேச்சு!

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உடைந்து செல்லும் நிலையில். எதிர்க்கட்சி தலைவர் பதவியும் பறிபோகும் நிலைக்கு வந்தால் 23

## மின் ஒழுக்கினால் அழகுசாதன நிலையம் தீயில் எரிந்து நாசம்

(கரணவாய்)

மின் ஒழுக்கினால் தீப்பற்றிக் கொண்ட அழகு சாதன விற்பனை நிலையத்தின் ஒருபகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. 04

# தமிழரசுக்கட்சியை தோற்கடிக்க உதயசூரியன் சின்னத்தில் புதிய கூட்டமைப்பு உதயம்

(யாழ்ப்பாணம்) தமிழரசுக்கட்சி தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு அழைத்து செல்கின்றது. அதன் தன்னிச்சையான செயற்பாடுகளை கட்டுப்படுத்தி, தமிழ் மக்களுக்கு புதிய தலைமைத்துவத்தை வழங்குவதே உதய சூரியன் சின்னத்தில் களமிறங்கவுள்ள புதிய கூட்டமைப்பின் நோக்கமாகும் என புதிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (23-ம் பக்கம் பார்க்க...)



## மனைவியை எரித்து கொலை செய்தவருக்கு 10 ஆண்டு சிறை

### யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, குடத்தனையில் மனைவியின் உடலில் தீப்பற்ற வைத்து கொலை செய்த குற்றத்துக்கு குடும்பத்தலைவருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

வடமராட்சி, மணற்காடு - குடத்தனையில் 2013ஆம் ஆண்டு டிசெம்பர் 3ஆம் திகதி ஞானதாஸ் மேரி ஜிமில்டா (வயது -24) என்ற இளம் குடும்பப் பெண் உடலில் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 24

## டிப்பர் வாகனம் மோதியதில் மனைவி பலி; கணவன் படுகாயம்

### மீசாலையில் நேற்று மாலை சம்பவம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மீசாலை ஏ9 வீதியில் டிப்பர் வாகனம் மோதி மனைவி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதோடு கணவன் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைச் சேர்ந்த 62 வயதுடைய சந்திரபாலன் பரமேஸ்வரி என்ற வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளதோடு 67 வயது சின்னையா சந்திரபாலன் என்ற வயோதி 23

## தமிழருக்கு சார்பாக நீதி செயற்படுகின்றது

### தாய் நாட்டுக்கான இராணுவ அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் இளைஞர்கள் உட்பட 11 தமிழர்கள் கொழும்பில் கடத்தப்பட்ட வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களமும், கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதவானும் பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாக தாய்நாட்டுக்கான இராணுவம் என்ற அமைப்பு குற்றம் 23

## கூட்டமைப்பின் பிளவை உடனே சீர்செய்க

### சம்பந்தனிடம் ரணில் பணிப்பு

(கொழும்பு)

கூட்டமைப்பின் பிளவினை உடனடியாக சீர்செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 23

## ரெலோவின் பிளவு சுமந்திரன் - அடைக்கலநாதன் அவசர சந்திப்பு

04 பக்கம் பார்க்க...

## தமிழரின் ஒற்றுமைக்காக செயற்படும் நாம் அரசியல் ஏமாளிகள் அல்ல

### சட்டத்தரணி சிறிகாந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய ஒற்றுமைக்காக செயற்படும் எம்மை அரசியல் ஏமாளிகள் என நினைத்தால் அதனால் ஏற்படும் முழுமையான விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் சட்டத்தரணி 23

## யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 33-வது பட்டமளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 33 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி நாளை 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இதில் 816 பட்டதாரிகள் பட்டங்களை பெறவுள்ளனர்.

அத்துடன் இந்த பொது 24

## தமிழ்க் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ்த் தேசிய பேரவை உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் சம உரிமை இயக்கம் மற்றும் பொது அமைப்புகள் என்பவற்றுக்கிடையிலான தேர்தல் உடன்படிக்கை ஒன்று நேற்று இரவு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய பேரவை (Tamil National Council) என்ற 23

பூநகரியின் தந்தை
அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம்
அவர்கள் எம் வாழ்வின் வழிகாட்டி
எழுதுகிறார்...
பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம்
அவர்களின் வழிகாட்டலில் உருவான பூநகரியின்
புகழ்மாலை புகழ் திருஞானபவன் விரைவில்...

## கூட்டமைப்பிலிருந்து புளொட் வெளியேற்றம்; ரெலோவுடன் சேர்ந்து புதிய கூட்டணி!

### இறுதி முடிவு இன்று தெரியவரும்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகியவற்றை தொடர்ந்து புளொட்டும் கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது.

மேலும் புதிய கூட்டமைப்பின் கீழ் புளொட் மற்றும் ரெலோ இணைந்து நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலை எதிர்கொள்வதற்கான பேச்சுக்களும் நடைபெற்று வருகின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## எம் நெஞ்சத்து நினைவுகளில் நீங்கா
## மூவாண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 - 01 - 1948



இறைவன் அடியில் 10 - 12 - 2014

## பத்மலோஜினி கனகலிங்கம்

எங்கள் அன்புத் தெய்வமே!
மூன்றென்ன மூவாயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
எமதுள்ளம் நீ நிறையும் கோயிலம்மா!
எம் மனதை விட்டகலுமா எம் ராணியின் பிரிவின் துயரம்
பண்பின் பிறப்பிடமாய், அன்பின் உறைவிடமாய்
விளங்கிய எங்கள் குலவிளக்கே!

அன்போடும் பண்போடும் எம்மை நேசித்த
எங்கள் அன்புத் தெய்வமே!
மீளாத் துயில் கொண்ட எங்கள் தெய்வமே!
எங்கள் இதயங்களில் என்றும் நீர் வாழும் தெய்வமம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றோம்

(1610)

தர்மலிங்கம் கனகலிங்கம்
67/45, தர்மலிங்கம் அவெனியூ,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
0212227796, 0779352583

நித்தம் உமது நினைவுடன் வாழும்
அன்புக் கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# பியர் போத்தலால் அடித்துக் கொலை

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டியில், இரண்டு குழுக்களுக் கிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஒருவர் கொலைசெய்யப்பட்டார். இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறிய போது, சந்தேக நபர் ஒருவர் மற்றொருவரது தலையில் பியர் போத்தலால் தாக்கியுள்ளார். இதில் பெருமளவு இரத்தம் வெளியேறி அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பலந்தொட்ட, ரம்புக்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது. சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவர் கைது செய்யப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## தரம்-5 புலமைப் பரிசில் சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

### மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்




கிஷோக்குமார் கவியழகன் (164), தேவறஞ்சன் மேரிசியானி (162) ஆகியோரையும் 70 புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(கி-615)

பாடசாலை சமூகம்
மு/சிலாவத்தை த.வி -முல்லைத்தீவு.

EVERSHINE EDUCATION CENTRE
THINK GLOBALLY ACT LOCALLY
EVERSHINE
EDUCATION CENTRE
#123, Brown Road, Jaffna.

புதிய கல்வியாண்டு 2018

ஆரம்பம்

ICT

தரம் 11
11.12.2017
காலை 6.00-7.00 மணி
ஆங்கில மொழிமூலம்

தரம் 10
09.12.2017
மாலை 5.30 மணி

தரம் 11
11.12.2017
மாலை 3.45 - 4.45 மணி
தமிழ் மொழிமூலம்

தமிழ் மொழிமூலம்
யாருக்கு?
தரம் 10, 11ல் பயிலும்
* பரீட்சையை மையப்படுத்திய
* த.தொ. தொழினுட்ப பிரயோகத்தை நடைமுறையில் விரும்புகின்ற
* த.தொ. தொழினுட்பத்தில் சிறந்த அடித்தளம் தேடுகின்ற
* எதிர்காலத்தில் த.தொ. தொழினுட்ப துறையில் பணியாற்ற விரும்பும்
மாணவர்களுக்கு மட்டும்

(1617)

எமது சேவைகள்
❋ கற்றல் கையேடுகள், மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.
❋ ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடாத்தப்படும்.
❋ பரீட்சையில் உயர்புள்ளி பெறும் மாணவருக்கு குறித்த மாதக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு.
❋ பல்லூடக எறிகை, நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்.

English Medium
To Whom?
Only the Grade 10,11 students who
* Like exam centered approach
* Prefer the application of ICT in real world
* Seek a solid foundation in ICT
* Want to choose ICT as future career
* Wish to grow in an English spoken environment



பெற்றோரின் கவனத்திற்கு:
❋ அலகுப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தவறாது தோற்றுதல் வேண்டும்.
❋ தகுந்த காரணமின்றியோ / முன்னறிவித்தலின்றியோ பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் வகுப்புக்களிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள்.

S. GOWSIGAN
(B.TECH - NETWORK TECH.)
077 378 4053

# இலங்கையில் தனி இராச்சியம்!

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது



## அதிகாரப் பகிர்வை எதிர்த்து கோத்தபாய கொக்கரிப்பு

(கொழும்பு)

**அதிகாரப் பகிர்வின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது. இலங்கையில் 'தனி இராச்சியம்' ஒன்றை உருவாக்குவதற்கே அதிகாரப் பகிர்வைப் பற்றிப் பேசுகின்றனர் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எலிய அமைப்பின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அதிகாரப் பகிர்வின் மூலம், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது. வேறு இராச்சியமொன்றை உருவாக்கவே அதிகாரப் பகிர்வைப் பற்றி பேசுகின்றனர்.

68 சதவீதத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் இலங்கை முழுவதும் வாழ்கின்றார்கள். இந்த நிலையில், குறித்த பிரதேசத்துக்கு மட்டும் அதிகாரத்தைப் பகிர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வைக் காண்பது?

அவர்களது இரகசிய எண்ணம் என்னவென்பது இதனூடாக தெளிவாகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற அனைத்து இன மக்களும் கௌரவமாக வாழக்கூடிய நாட்டை உருவாக்கவும், நாட்டைப் பிரிப்பதற்கு எதிராகவுமே எமது இந்த போராட்டம் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கைக்கும் உக்ரேனுக்கும் இடையில் குற்றவியல் ஆவணங்கள் பரிமாற்றம்

(கொழும்பு)

உக்ரேனும் இலங்கையும் இருதரப்பு ஒப்பந்தங்கள் மீதான உறுதி செய்தல் ஆவணங்களை பரிமாறிக் கொண்டன.

டில்லியை வதிவிடமாகக் கொண்ட இலங்கைக்கான உக்ரேன் தூதுவர் இகோர் பொலிக்கா மற்றும் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் ஆகியோர் நேற்று முன்தினம் காலை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் "குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட உதவி தொடர்பான ஒப்பந்தம்" மற்றும் "தண்டனை விதிக்கப்பட்ட நபர்களின் பரிமாற்றம் தொடர்பான ஒப்பந்தம்" ஆகிய உறுதி செய்தல் ஆவணங்களை பகிர்ந்து கொண்டனர்.

இலங்கை மற்றும் உக்ரேனுக்கிடையே குற்றவியல் விடயங்கள் மற்றும் தண்டனை விதிக்கப்பட்ட நபர்களின் பரிமாற்றல்கள் ஆகியவற்றில் சட்ட மற்றும் நியாயாதிக்க ஒத்துழைப்பினை வலுப்படுத்தும் இவ்விரு ஒப்பந்தங்களும், இலங்கையின் முன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர 2016 ஆம் ஆண்டு உக்ரேனுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்டன.

இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி, விரிவாக்கும் நோக்குடன் முதலீடுகள், கப்பல் வணிகம், கலாசாரம், கல்வி மற்றும் விளையாட்டு ஆகியவற்றின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு சார்ந்த விடயங்களில் பல்வேறு ஒப்பந்தங்களிலான பேச்சுவார்த்தை செயற்பாடுகளில் தற்சமயம் இரண்டு நாடுகளும் ஈடுபட்டு வருகின்றதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

## மீனவர் மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

கல்லடி கடற்பரப்பில் கணவாய் பிடித்துக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்டதில் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது .

குருநகர் தொடர்மாடி குடியிருப்பைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எமிலியான் கியான் (வயது- 39) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் குருநகர் கடற்கரையிலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் கல்லடி பகுதிக்கு கணவாய் பிடிக்கச் சென்றுள்ளார். 6 மணியளவில் இரவு உணவு எடுத்துவிட்டு கணவாய் பிடிக்கத் தொடங்கியுள்ளனர். அப்போது இவருடன் சென்ற நண்பரிடம் தனக்கு நெஞ்சு வலிப்பதாக கூறி சற்று நேரம் இளைப்பாறுவதாக தெரிவித்துவிட்டு படகில் படுத்துள்ளார்.

சற்று நேரத்தில் குறித்த நபர் பேச்சு மூச்சின்றி இருப்பதை அறிந்த நண்பர் உடனடியாக கரைக்கு கொண்டு வந்து 9 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சேர்த்தபோது அவரை பரிசோதித்த வைத்தியர் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவித்தார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (இ-9)

## கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்கள் சந்திப்பு





(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படப் போவதாக அறிவித்துள்ள ரெலோ அமைப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு பங்காளிக் கட்சியான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனை யாழ்ப்பாணம் நீர்வேலியில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுக் காலை சந்தித்து கலந்துரையாடினர்.

ரெலோ அமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், முன்னாள் கிழக்கு மாகாண மாகாணசபை உறுப்பினர்கள் கோ. கருணாகரன் (ஜனா) இ. பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச்சந்திப்பில் உதயசூரியன் சின்னத்தில் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் தமது கட்சி இனி வருங்காலங்களில் இலங்கைத் தமிழரசுக்கட்சியுடன் இணைந்து செயற்படாது என்றும் ரெலோ சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## பட்டப்படிப்பு கற்கை நெறியை தொடரும் மாணவர்களுக்கு கடன் சலுகை-கயந்த

(கொழும்பு)

பட்டப்படிப்புக் கற்கை நெறியை தொடரும் மாணவர்களுக்கு கடன் சலுகை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணை பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரசாங்க தகவல்திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்ய பயன்படுத்தப்படும் வெட்டுப்புள்ளியின் காரணமாக அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் இணைந்து கொள்ள முடியாத மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கும் அரசுசாரா உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு கற்கை நெறியை தொடர்வதற்காக இந்த கடன் வழங்கப்படவுள்ளது .

இதன் கீழ் ஆகக்கூடிய கடன் தொகையாக 8 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. வட்டியற்ற கடன்வசதி திட்டமொன்று 2017 ஆம் ஆண்டு வரவு -செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்தது. அரசாங்கம் இதனை தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதற்கமைவாக அரசு அல்லாத கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பை தொடர்வதற்காக கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கு பொதுவான செலவுகளின் அடிப்படையில் 1.1 மில்லியன் ரூபா வரையில் கடன் தொகையை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஏனைய கற்கை நெறிகளை தொடரும் மாணவர்களுக்கும் ஏனைய செலவுகளுக்காக வருடத்திற்கு 75 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகை கடன் தொகையினை மூன்று வருட பட்டப்படிப்பிற்காக 10 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவரையிலும், நான்கு வருட பட்டப் படிப்பிற்காக 11 இலட்சம் ரூபாவரையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக மேலும் தெரிவித்தார். (இ-7)


**சிறுநீரக நோய்களுக்குச் சிகிச்சை**

**Ayurvedic Treatment for Renal Diseases**

சிறுநீர் குறைவாகவும், வலி மற்றும் எரிச்சல் கடுப்புடன் வெளியேறல். ஆரம்ப நிலை சிறுநீரக செயலிழப்பு நிலை (Renal Failure in Primary Stage). சிறுநீரகம், சிறுநீர்ப்பை இவற்றில் கற்கள் காணப்படுதல் (Stone in the Kidney & Bladder) கற்கள் காரணமாக ஏற்படும் வயிற்று வலி, சிறுநீர்த் தடை, இரத்தம் கலந்த சிறுநீர் வெளியேறல் மற்றும் ஆண்களில் ஏற்படும் புரஸ்தேகோள (Enlargement of the Prostate gland) பிரச்சினைகள் போன்றவற்றால் சிறுநீர் கழிப்பதில் தாமதம், தடை, அடிக்கடி வெளியேற்றும் உணர்வு மற்றும் சிறுநீர்த்தொற்று (Urine Infection), கீழ்வயிற்று வலி, நித்திரை மற்றும் மனக்குழப்பம் போன்ற பிரச்சினைகளுக்கு சித்த ஆயுள்வேத முறையில் சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D.A.M (cey), D.M.S (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1 2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்.
Tel. 021 205 4066 / 077 872 5251

## சுமந்திரன் - அடைக்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனை, ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று அவசரமாக சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பு கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது பல வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரெலோவின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட போவதில்லை என ரெலோ அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது.

இந்நிலையில், நேற்றைய சந்திப்பின்போது "குறித்த அறிவிப்புக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. சுமுகமான பேச்சு வார்த்தைகள் மூலம் புதிய முறையிலான தேர்தலை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம்.

இதற்கு தமிழரசுக்கட்சி உதவிசெய்ய வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் எம்.ஏ. சுமந்திரனிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கு பதிலளித்து பேசிய எம்.ஏ. சுமந்திரன், "இரண்டு பக்கங்களிலும் எழுந்துள்ள கோரிக்கைகளை நியாயபூர்வமாக ஆராய்ந்து, எதிர்வரும் தேர்தலை மிகவும் பலததுடன் எதிர்கொள்வோம்" எனக் கூறியுள்ளார்.

மேலும், நேற்றைய சந்திப்பு மிகவும் சுமுகமாக இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பாக ரெலோ அமைப்பின் முடிவுகளில் மாற்றம் எதுவுமில்லை என அதன் செயலாளர் என்.சிறீகாந்தா நேற்று கூறியுள்ளார்.

ரெலோவின் செயலாளர் என்.சிறீகாந்தா இவ்வாறு அறிவித்திருக்கும் நிலையில், அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.ஏ.சுமந்திரனை நேற்று மாலை சந்தித்து பேசியுள்ளார்.

இந்நிலையில், ரெலோ அணியினர் இரண்டு தரப்பாக பிரிந்துள்ளார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## அழகு சாதன நிலை...

நெல்லியடி பிரதான வீதியில் உள்ள அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் நேற்று காலையில் தீ ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நெல்லியடி வர்த்தக சங்கத்தினர், கரவெட்டி பிரதேச சபையினர், பொதுமக்கள் இணைந்து தீயை அணைத்தனர்.

மின்சார சபையினரும் மின் இணைப்பினை உடனடியாகத் துண்டித்தனர்.

யாழ்.தீயணைப்புப் படையினரும் சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகை தந்தனர்.

தீயினால் ஒரு பகுதி எரிந்து நாசமான போதிலும் சேத விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

வடமராட்சியில் தீயணைப்புப் படை இதுவரை அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-60)


# மரண அறிவித்தல்



செல்வன்
## முகுந்தன் இசைப்பிரியன்

கொக்கன் மாவிட்டபுரத்தை (கொல்லன் கலட்டி மடத்தடியை) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முகுந்தன் இசைப்பிரியன் நேற்று (06.12.2017) புதன் கிழமை காலமானார்.

அன்னார் முகுந்தன் - சிவமனோகரி தம்பதிகளின் அன்பு மகனும் லிதுசிகாவின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணியளவில் கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்கன் மாவிட்டபுரம்,
அளவெட்டி.
(1618)
தகவல்: குடும்பத்தினர்
077 302 7730



# மரண அறிவித்தல்



திருமதி
## றஞ்சிதமலர் கணேசமூர்த்தி (றஞ்சி)

பளை இத்தாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றஞ்சிதமலர் கணேசமூர்த்தி (றஞ்சி) நேற்று (06.12.2017) புதன்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2017) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பளை இத்தாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பளை அரச கேணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பளை,
இத்தாவில்.
(C-616)
தகவல்:
இன்பாகரன் (குடும்பத்தினர்)
077 103 657?



யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

# பதவி வெற்றிடம்

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடத்துக்கு ஆள்சேர்ப்புச் செய்யப்பட உள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் அதற்கான விண்ணப்பத்தினை சமாச அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு விண்ணப்பத்தினை தலைவர், யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 637, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 2017.12.21ஆம் திகதி வியாழக்கிழமை 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பதவி :- வெளிக்கள உத்தியோகத்தர்
சம்பள குறியீட்டு இல :- 209/14
சம்பள அளவுத்திட்டம் :- 13875 - 115X10 - 125X10 - 16275

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய இதரபடிகள் வழங்கப்படும்.

வயதெல்லை 18 - 45க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

கூட்டுறவுப் பணியாளர் ஆயின் சங்கத்தினூடாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனமொன்றில் தொடர்புபட்ட துறையிலான 02 வருட கற்கைநெறி ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

ஆ) க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் அல்லது வர்த்தகம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் இரண்டு 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

பதவி :- காரியாலய உதவியாளர்
சம்பள குறியீட்டு இல :- 317/16
சம்பள அளவுத்திட்டம் :- 13160 - 105X10 - 115X10 - 15360

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய இதரபடிகள் வழங்கப்படும்.

வயதெல்லை 18 - 45க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

கூட்டுறவுப் பணியாளர் ஆயின் சங்கத்தினூடாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவத்துடன் 05ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.

அல்லது

ஆ) 08ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.

தலைவர்
யாழ்.மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்,
637, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-614)



# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19 - 07 - 1941
இறப்பு 30 - 11 - 2015

அமரர்
## வல்லிபுரம் வயித்திலிங்கம்

ஈர் பல ஆண்டுகள் போய்விடினும்
என்றும் எம்முள் இருக்கும் அப்பா...
பேறாய் பெரும் சீர் செல்வங்களை
பெற்று வளர்த்தாய் இப்பாரில்
சீராய் சிறப்பும் வல்லமையும்
சிறந்த சிந்தை எம் தந்தை!
ஆராவமுதே எம் அழகே - உன்
ஆத்மா சாந்தி அடையட்டும்...!

உடுவில் தெற்கு,
புதுமடம்.
(1612)
குடும்பத்தினர்

# தேர்தல் நடத்தப்பட முன் பௌத்தர்களை வடக்கில் குடியமர்த்த வேண்டும்

## சரத் வீரசேகர வலியுறுத்தல்



(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட முன்னதாக வடக்கு பகுதியில் வசித்து வந்த பௌத்த, முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என முன்னாள் கடற்படைத் தளபதியும் முன்னாள் பிரதியமைச்சருமான சரத் வீரசேகர வலியுறுத்தியுள்ளார்.

'எலிய' அமைப்பின் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடந்தது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

“உலகிலேயே, அரசு முன் வைத்த ஒரு வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவளித்த ஒரே எதிர்க்கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகத்தான் இருக்கும். ஒருவேளை, தனிநாட்டுக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னகர்த்தினால் தற்போதைய அரசும் வேறு கதையேயின்றி அதை அங்கீகரிக்கும். இதற்காக நாட்டையோ, நாட்டு மக்களையோ காட்டிக் கொடுக்கவும் தற்போதைய அரசு தயங்காது. வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மிக சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமன்றி, தனது பதவியையும் அதிகாரத்தையும் வைத்து நாட்டுக்குப் பொருந்தாதசட்டமூலங்களைஇயற்றிக் கொள்ளவும் அவர் முயற்சிக்கிறார் எனவும் சரத் வீரசேகர தெரிவித்தார். (இ-7)


### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?


எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(C-489)


## இலங்கையின் கல்வி முறையில் மாற்றம்

### கல்வியமைச்சர் காரியவசம் தகவல்

(கொழும்பு)



உலகின் புதிய போக்குக்கு அமைவாக இலங்கையின் கல்வி முறையில் மாற்றங்களை செய்து கொண்டிருப்பதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். எதிர்காலத்திற்கு பொருத்தமான விதத்தில் பாடசாலைக் கல்வி முறையை மாற்றம் செய்து நாட்டுக்கு பொருத்தமான புதிய பரம்பரையை உருவாக்குவதே நோக்கம் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## புதிய அரசியலமைப்பும் நாமும் விழிப்புணர்வு கருத்தமர்வு யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் புதிய அரசியலமைப்பும் நாமும் எனும் தலைப்பிலான விழிப்புணர்வு கருத்தமர்வு நாளை மறுதினம் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள சிந்தனைக் கூடக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதில் கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சட்டத்தரணி ம.கோசலை மற்றும் வட கீழ் மாகாண முன்னாள் பிரதிச் செயலாளர் சி.கிருஷ்ணானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-10)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி**
**(இராசாத்தி)**

மண் மகிழ 20.06.1948 — விண் நெகிழ 10.12.2014

திதி:-07.12.2017

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
மகிழ்வான மக்கட்பேறு அடைந்து
மானிடரில் நம் மனிதராக உயர்ந்து
மனிதம் காத்த எம் தெய்வமே
நீர் இல்லா இடம் வெறுமையே ஆனதம்மா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(1592)

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## இராசி பலன்

07.12.2017
கார்த்திகை 21, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 01.24 மணிவரை
பூசம் பின்னிரவு 2.17 மணிவரை
சுபநேரம் 07.47--9.17 மணிவரை
இராகுகாலம் 01.47-03.17 மணிவரை
அமிர்தசித்தம்

வளவர்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம், பூராடம் | | ராகு சந் |
| கேது | | | |
| | சனி, புத சூரி, சுக் | குரு, செவ் | |

**மேடம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.

**மிதுனம்:** நிர்வாகத்திறமையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கடகம்:** கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**கன்னி:** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, யோகமான நாள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**தனுசு:** கலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், ரோக பயமுண்டு.

**மகரம்:** விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்:** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், தன்னம்பிக்கை அதிகரிக்கும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**மீனம்:** புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.



யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் கோப்பாய்க் கோட்ட அதிபர் சங்கத் தலைவரும் வடமாகாணக் கல்வித்திணைக்கள பரீட்சை அலுவலருமான முத்துச்சாமி விக்னேஸ்வரனின் மணிவிழா நிகழ்வுகள் உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

## யாழ். மத்தியஸ்த சபை அமர்வுகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்று வந்த ஜே/246 யாழ்.மத்தியஸ்தசபைக.பொ.தசாதாரண தரப் பரீட்சை காரணமாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் டிசெம்பர் மாதம் 31ஆம்திகதிவரையாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றேன் என தலைவர் இ.அ.திலகரட்ணம் அறிவித்துள்ளார். (இ)

## நூல்வெளியீடும் அன்பளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.எய்ட் நிறுவனத்தின் அனுசரணையில் கணிதம் தரம்-8 (புதிய பாடத்திட்டம்) நூல் வெளியீடும் அன்பளிப்பும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சுந்தரசிவம் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி ஒய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார், சிறப்பு விருந்தினராக வலிகாமம் ஒய்வு நிலை கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளரும் ஆறுதல் நிறுவன ஆலோசகருமான சிவஞானம் சுகுமாரன், கௌரவ விருந்தினராக யாழ்.எயிட் இணைப்பாளர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நூல் வெளியீட்டின் முதற்பிரதியினை லயன் ஆளுநர், கருமத்திருதி, வைத்திய கலாநிதி வை.தியாகராசா பெற்றுக்கொள்வார். (இ-7)




## ஜெயலலிதாவுக்கு அஞ்சலி



(சாவகச்சேரி)

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் முதலாம் ஆண்டு நினைவுதினம் தென்மராட்சியில் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் கைதடி குமரநகர் சனசமூக நிலைய மண்டபத்திலும் சாவகச்சேரி ஸ்ரீபழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொண்டு ஜெயலலிதாவின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இவ் அஞ்சலி நிகழ்வுகளின் போது மறைந்த தமிழக முதல்வரின் நினைவாக மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தனிப்பட்ட நிதியில் இருந்து சுமார் 50 மாணவர்களுக்கு புத்தகப் பைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் நகர இளைஞர் கழகத்தின் தலைவருமான ஞா.கிஷோர் மற்றும் பொது அமைப்புக்களின் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ-89)

## பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பின்வரும் சான்றுப் பொருட்கள் இது வரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன. எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 02 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலை நாட்டும்படி குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 431(2)இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப் படுத்தப்படுகின்றது.

வழக்கு.இல-AR/1250/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/989/17, மறுதவணை 06.02.2017, விபரம்- இலக்கமற்ற கறுப்புநிற துவிச்சக்கர வண்டி 01, வழக்கு.இல-AR/1251/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/149/16, மறுதவணை 06.02.2018, விபரம்- இலக்கமற்ற கறுப்புநிற ஆண்கள் துவிச்சக்கரவண்டி 01, வழக்கு.இல-AR/1252/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/325/17, மறுதவணை 06.02.2018, விபரம்- இலக்கமற்ற லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி 01, வழக்கு.இல-AR/1253/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/1862/17, மறுதவணை 06.02.2018, விபரம்- இலக்கமற்ற லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி 01, வழக்கு.இல-AR/1254/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/607/17மறுதவணை06.02.2018, விபரம்- Ci101KR இலக்க றலிவக்க துவிச்சக்கர வண்டி01,இல-AR/1255/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/1464/17, மறுதவணை 06.02.2018, விபரம்- 695 95939 இலக்க துவிச்சக்கர வண்டி 01,இல-AR/1256/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/2310/17, மறுதவணை 06.02.2018, விபரம்- L.H 604097 இலக்க லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி01,இல-AR/1257/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/2286/17, மறுதவணை 06.02.2018, விபரம்-NPHM 4871 இலக்கஹீரோ கொண்டா வர்க்க மோட்டார் சைக்கிள் 01,இல-AR/1258/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/2286/17, மறுதவணை 06.02.2018, விபரம்-கெல்மட் 01, இல-AR/1259/17, சான்றுப்பொருள் இலக்கம்-PR/1270/17, மறுதவணை 06.02.2018, விபரம்- 143-3780 இலக்க TVS வர்க்க மோட்டார் சைக்கிள் 01 என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

## உள்ளூராட்சி தேர்தல்;சாவகச்சேரி நகர சபைக்கு தமிழரசுக் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது




(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சாவகச்சேரி நகர சபையில் போட்டியிடுவதற்காக இலங்கைத் தமிழரசு கட்சி நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் நண்பகல் 12 மணிக்கு கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான அருந்தவபாலன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-4)

## மாதாந்தப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்தத் திரைப்படக் காட்சித் தொடரில்,நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு, 'கம்பெரலிய' என்னும் சிங்களத் திரைப்படம் காண்பிக்கப்படும்.

லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட இத்திரைப்படம், 1965 இல் டில்லியில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் 'தங்க மயில்' விருதைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்துடன் சேர்த்து, 'லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிசின் உலகம்' என்னும் ஆவணப் படமும் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இலவச தொழிற்பயிற்சி கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்.மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது. யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், கைதடி, பண்டத்தரிப்பு, சுன்னாகம், பருத்தித்துறை மற்றும் தெல்லிப்பழை தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்கைநெறிகள் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவை மூன்று, ஆறு மற்றும் ஒரு வருடம் பயிற்சி காலங்களைக் கொண்டது. இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகளை முழுமையாகப் பூர்த்தி செய்து NVQ சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் அனைவருக்குமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (021 222 7949) அல்லது அந்தந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 15.12.2017ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.உதவிப்பணிப்பாளர் குறிஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

## பண்பாட்டுப் பெருவிழாவும் மலர் வெளியீடும் நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வடமராட்சி கிழக்கு பிரதேச கலாசார பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழாவும் ஆக்க இலக்கிய மலர் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மருதங்கேணி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.அபிராமி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-64)



இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் நெல்லியடி கிளையின் வாடிக்கையாளரான அபிஸா ஹாட்வெயார் உரிமையாளர் எஸ்.பிரபாகரன் என்பவருடைய இயற்கை மரணக் கொடுப்பனவு தொகையான 6 இலட்சத்து 89 ஆயிரத்து 154 ரூபா தொகைக்கான காசோலையினை நெல்லியடி கிளையின் விற்பனை முகாமையாளர் கு.ஆறுமுகன் திருமதி. கவிதா பிரபாகரனிடம் வழங்குவதை படத்தில் காணலாம்.

# வடமாகாணக் கல்வியில் வீழ்ச்சிப் போக்கு உள்ளதா?

04

**சேர்.பொன். இராமநாதன் நினைவுப் பேருரை- 2017 யா/ இராமநாதன் கல்லூரியில் 11.11.2017 அன்று இடம் பெற்றது. இதில் திருமதி. சசிகலா சிவநாதன் அவர்களால் வழங்கப்பட்ட நினைவுப் பேருரை இங்கு பிரசுரமாகின்றது.**



திருமதி
சசிகலா சிவநாதன்
(B.A Hons, Dip in Edu, M.Edu)
(S.L.T.S - I ,ஓய்வு நிலை உப அதிபர்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி)

தனியார் பரீட்சார்த்திகளை உள்ளடக்கிய எல்லா மாணவர்களையும் எடுத்து நோக்கும் போதும் முதலாவது இடத்தில் வடமாகாணமும் 9 ஆவது இடத்தில் வடமத்திய மாகாணமும் உள்ளது. க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்து உயர்தர வகுப்பிற்குள் உள்வாங்கப்பட்ட வடமாகாண மாணவர்கள் உயர்தர வகுப்பில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்றதால் வடமாகாணம் முதல் இடத்தைப்பெற முடிந்தது. இது கல்வியில் வடமாகாணம் எப்போதும் உயர் நிலையில் இருப்பதை நிறுவுவதாகவுள்ளது. இவ்வாறான நிலையில் இலங்கையின் 25 மாவட்டங்களில் வடமாகாணத்தில் உள்ளடங்கியுள்ள மாவட்டங்களின் வரிசைப்படுத்தல் நிலையை ஒப்பிடும்போது க.பொ.த. சாதாரண தரத்தில் 9ஆவது இடத்திற்கு தள்ளப்படுவதற்கு காரணமாய் இருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள் உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையிலான பல்கலைக்கழகம் புகுவதற்கான வரிசைப்படுத்தலில முதலாவது இடத்தினைக் கிளிநொச்சியும் (69.75%). 2 ஆவது இடத்தில் மன்னாரும்(64.57%), 3 ஆவது இடத்தில் வவுனியாவும் (64.20%). 4 ஆவது முல்லைத்தீவும் (63.23%), 5 ஆவது யாழ்ப்பாணம் (62.95%) இருந்துள்ளது. இவ் ஐந்து மாவட்டங்களும் முன்னிலையிலுள்ளன.

இந்த நிலையினை மேலும் உறுதிப்படுத்துவதாக உயர்தர உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் முதலாம் இடத்தில் கொழும்பு மாவட்டம் (63.24 %), மூன்றாம் இடத்தில் வவுனியாவும் (57.79%),நான்காம் இடத்தில்.யாழ்ப்பாணமும் (55.94%), 22ஆம் இடத்தில் முல்லைத்தீவும் (40.87%), 25 ஆவது இடத்தில் கிளிநொச்சியும் (36.28%) உள்ளது.

இதேவேளையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் முதலாவது இடத்தில் மட்டக்களப்பும் (57.53%), இரண்டாம் இடத்தில் யாழ்ப்பாணமும் (54.39%), ஆறாவது இடத்தில் கிளிநொச்சியும் (51.30%), எட்டாவது இடத்தில் வவுனியாவும் (47.37%),24 ஆவது இடத்தில் முல்லைத்தீவும் (36.96%), 25 ஆவது இடத்தில் மன்னாரும் (34.48%) உள்ளன. விஞ்ஞானப்பிரில் 24 ஆவது, 25ஆவது மாவட்டமாக இருப்பது பின்தங்கிய இம்மாவட்டங்களில் விஞ்ஞானக்கல்விக்கான அடிப்படை வசதிகள் பற்றாக்குறையாக இருந்ததே காரணமாகும்.

உயர்தர வணிகப்பிரிவில் முதலாவது இடத்தில் மட்டக்களப்பும் (65.5%), 3 ஆவது இடத்தில் கிளிநொச்சியும் (62.02%), 10 ஆவது இடத்தில் வவுனியாவும் (58.33%), 13 ஆவது இடத்தில் யாழ்ப்பாணமும் (56.84%),21 ஆவது இடத்தில் மன்னாரும் (50.99%),24 ஆவது இடத்தில் முல்லைத்தீவும் (49.10%) இருப்பதைக் கருத்தில் கொண்டு நோக்கின் வடமாகாணம் கல்வியில் பின்தங்கியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

கலைப்பிரிவு மாணவர்களின் பெறுபேறுகள்ளினூடாக பல்கலைக்கழகம் புக தகுதியுடையோர் முதலாவது இடத்தில் கிளிநொச்சியும் (84.21%), 2ஆவது இடத்தில் முல்லைத்தீவும் (79.44%), 3 ஆவது இடத்தில் மன்னாரும் (77.78%), 7 ஆவது இடத்தில் வவுனியாவும் (69.65%), 8 ஆவது இடத்தில் யாழ்ப்பாணமும் (69.42%) இருப்பது வடமாகாணத்தின கல்வி நிலை ஒப்பீட்டளவில் உயர்வான நிலையில் இருப்பதை தெளிவாகக் காட்டுகிறது.

### 2014ஆம் ஆண்டு உயர்தரப் பெறு பேறுகளும் வட மாகாணமும்

2014ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தர பெறுபேறுகளின்படி வடமாகாணம் 2 ஆவது இடத்திலுள்ளது. இதே ஆண்டு க.பொ.த. சாதாரண பெறுபேற்றின் அடிப்படையில் வடமாகாணம் 9 ஆவது இடத்தில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் இரு தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு உண்மையில் வடமாகாணம் கல்வி நிலையில் எங்கிருக்கிறது என்ற முடிபை எங்களால் திருத்தமாக முன்வைக்க முடியாது.

குறிப்பாக உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் 2 ஆவது இடத்திலும் (55.83%), பௌதீக விஞ்ஞானப்பிரிவில் 2 ஆவது இடத்திலும் 48.94% மும் வணிகப்பிரிவில் 6 ஆவது இடத்திலும் 61.68 % மும் கலைப்பிரிவில் 3 ஆவது இடத்திலும் 71.96 இருப்பதால் வடமாகாணம் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த மட்டத்தில் இருப்பதை இப்புள்ளி விபரத்தினூடாக அறிய முடிகின்றது.

2014ஆம் ஆண்டிற்கான பாடசாலை மட்ட க.பொ.த.உயர்தர பெறுபேறுகளின்படி வடமாகாணத்தில் உள்ள மாவட்ட நிலைகளை இலங்கையின் 25 மாவட்டங்களுடன் ஒப்புநோக்கின் க.பொ.த.சாதாரண தரத்தில் மிகப்பின்தங்கிய நிலையிலிருந்த கிளிநொச்சி (69.03%) முதலாவது இடத்தினும் 2 ஆவது இடத்தில் வவுனியாவும்(65.49%), 7 ஆவது இடத்தில் முல்லைத்தீவும் (33.61%), 8 ஆவது இடத்தில் மன்னாரும்(63.61%), 9 ஆவது இடந்தில் யாழ்ப்பாணமும் (63.29%)' இருந்துள்ளது. க.பொ.த.சாதாரணதரப் பெறுபேறுகள் வடமாகாணத்தை 9 ஆவது இடத்திற்கு தள்ளினாலும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு வடமாகாணத்தை 2 ஆவது இடத் தில் வைத்திருப்பதோடு மாவட்ட மட்டத்திலும் முன்னிலையில் இருப்பதை மேற்காட்டிய தரவுகள் காட்டுகின்றன.

மாவட்ட அடிப்படையில் உயர்தரக் கற்கைப் பிரிவுகளை கருத்தில் கொண்டு பார்க்கையில் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் யாழ்ப்பாண மாவட்டம் 3 ஆவது இடத்திலும் (60.00%), வவனியா 4 ஆவது இடத்திலும் (55.61%), கிளிநொச்சி 7 ஆவது இடத்திலும் (53.02%), மன்னார் 14 ஆவது இடத்திலும் (48.82%), முல்லைத்தீவு 23 ஆம் இடத்திலும் (37.84%) இருந்துள்ளது. மாவட்ட அடிப்படையில் ஒப்புநோக்கும்போதும் வடமாகாண மாவட்டங்கள் பல முன்னிலையில் இருப்பதையே காட்டுகிறது.

பௌதீக விஞ்ஞானப் பிரிவை நோக்கும் போது யாழ்ப்பாணம் 4 ஆவது இடத்திலும் வவுனியா 6 ஆவது இடத்திலும் கிளிநொச்சி 7 ஆவது இடத்திலும் மன்னார் 24 ஆவது இடத்திலும் முல்லைத்தீவு 25 ஆவது இடத்திலும் உள்ளது. இங்கு மன்னாரும் முல்லைத்தீவும் இறுதி நிலைக்கு தள்ளப்பட்டதற்கு விஞ்ஞானக் கல்வி கற்பிப்பதற்கான ஆய்வுகூட வசதிகளும் ஆசிரியர் பற்றாக்குறையும் இருந்தமை காரணமாகலாம். இப் பிரதேசங்களில் க.பொ.த.சாதாரண தரப் பெறுபேறு வீழ்ச்சியடைந்து வடமாகாண த்தை இறுதி நிலைக்குத் தள்ளியதும் குறிப்பிட த்தக்கது.

வணிகப்பிரிவில் 25 மாவட்டங்களில் கிளிநொச்சி முதலாவது இடத்திலும் 17 இடத்தில் முல்லைத்தீவும் 18ஆவது இடத்தில் வவுனியாவும் 19 ஆவது இடத்தில் யாழ்ப்பாணமும் 22ஆவது இடத்தில் மன்னாரும் இருப்பது போல் கலைப்பிரிவில் முல்லைத்தீவு முதலாவது இடத்திலும் கிளிநொச்சி 2 ஆவது இடத்திலும் மன்னார் 4 ஆவது இடத்திலும் வவுனியா 9ஆவது இடத்திலும் யாழ்ப்பாணம் 14 ஆவது இடத்திலும் இருப்பதைச் சான்றாகக் கொண்டு நோக்கும் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் விஞ்ஞானக் கல்வியில் சற்று பின் நிலையில் இருந்தாலும் வணிகக்கல்வி மற்றும் ஏனைய கல்விப் பிரிவுகளில் முன் நிலையில் இருப்பது அறிவு சார்ந்த கல்வியில் இப்பிரதேசங்கள் பின்தங்கவில்லை என்பதை காட்டுகின்றது.

2014 ஆம் ஆண்டிற்கான எல்லா மாணவர்களையும் உள்ளடக்கிய க.பொ.த. உயர்தர பெறுபேறுகளின்படி வடமாகாணத்தில் உள்ள மாவட்ட நிலைகளை நோக்கும் போது இலங்கையின் 25 மாவட்டங்களை ஒப்பு நோக்கின் முதலாவது இடத்தில் கிளிநொச் சியும் 7 ஆவது இடத்தில் வவுனியாவும் 9 ஆவது இடத்தில் முல்லைத்தீவும் 10 ஆவது இடத்தில் யாழ்ப்பாணமும் 17 ஆவது இடத் தில் மன்னாரும் உள்ளது.

இந்நிலையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 3ஆவது இடத்தில் யாழ்ப்பாணமும் 10ஆவது இடத்தில் கிளிநொச்சியும் 12 ஆவது இடத்தில் வவுனியாவும் 16 ஆவது இடத்தில் மன்னாரும் 24 ஆவது இடத்தில் முல்லைத் தீவும் இருப்பது போல பௌதீக விஞ்ஞானப் பிரிவில் 3 ஆவது இடத்தில் யாழ்ப்பாணமும் 7 ஆவது இடத்தில் வவுனியாவும் 12ஆவது இடத்தில் கிளிநொச்சியும் 24 ஆவது இடத்தில் மன்னாரும் 25 ஆவது இடத்தில் முல்லைத் தீவும் இருப்பது விஞ்ஞானக்கல்வி முல்லைத் தீவிலும் மன்னாரிலும் கீழ்நிலையில் இருப்பதற்கான காரணத்தை அறிந்து அக் கல்வி சார்பாக ஆக்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேகாலப்பகுதியில் வணிகப்பிரிவின் பெறுபேற்று நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்,வவுனியா மன்னார் முறையே 2ஆம், 17ஆம், 18ஆம், 20 ஆம், 24ஆம் இடங்களில் இருந்தன. அவ்வாறே கலைப்பிரிவில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் முறையே முதலாம், 3ஆம், 12ஆம், 14ஆம், 16ஆம் இடங்களிலிருந்தன. கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசம் வணிகம் கலைப்பிரிவுகளில தேசிய ரீதியில் முன்னிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

2015 ஆம் ஆண்டு க.பொ.த.(உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில்) பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதியானோர்.

இவ்வாண்டில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை மதிப்பீட்டில் வடமாகாணம் 9 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருந்தது. முதல் முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் களை உள்ளடக்கிய மதிப்பீட்டில் வடமாகாணம் முதலாம் இடத்தில் இருந்தது. 2ஆம் இடத்தில் சப்ரகமுவ மாகாணமும் 3ஆம் இடத்தில் மேல்மாகாணமும் 4ஆம் இடத்தில் ஊவா மாகாணமும் 5 ஆம் இடத்தில் தென் மாகாணமும் 6ஆம் இடத்தில் கிழக்கு மாகா ணமும் 7ஆம் இடத்தில் மத்திய மாகாண மும் 8ஆம் இடத்தில் வடமேல் மாகாணமும் 9 ஆம்இடத்தில் வடமத்திய மாகாணமும் இருப்பது யாழ். மாவட்ட கல்விநிலை தேசிய ரீதியின் முன்னிலையில் இருப்பதையே காட்டுகிறது. பாடசாலை பரீட்சைக்கு தோற்றிய எல்லா மாணவர்களையும் உள்ளடக்கி மதிப்பீட்டிலும் வடமாகாணம் 3ஆம் இடத்தி லிருப்பதையே புள்ளிவிபரம் காட்டுகிறது.

(தொடரும்)



**வடமாகாணக் கல்வியில் குறிப்பாக இடை நிலைக்கல்வி பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகிறதா? வீழ்ச்சிப்போக்கு காணப்படுகின்றது எனக்கருத்துரைப்பது சரியானதா? என்பது பற்றிய ஆய்வு.**

# 30 கோடியே 88 இலட்சத்து 53 ஆயிரம் ரூபா உரமானியக் கொடுப்பனவாகப் பகிர்ந்தளிப்பு

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு உட்பட்ட 8 கமநல சேவை நிலையங்களின் கீழ் 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள 17 ஆயிரத்து 111 விவசாயிகளின் 61 ஆயிரத்து 770.25 ஏக்கர் நெற்செய்கைக்கான உரமானியக் கொடுப்பனவாக 30 கோடியே 88 இலட்சத்து 53 ஆயிரத்து 750 ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் நடப்பாண்டுக்குரிய காலபோக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயி ஒருவருக்கு ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் ஆகக் கூடியது ஒரு விவசாயிக்கு 5 ஏக்கருக்குரிய உரமானியக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

எனவே, விவசாயிகள் உரமானியக் கொடுப்பனவை தங்களுக்குரிய வங்கிகளுக்குச் சென்று பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உரமானியக் கொடுப்பனவு தங்களது வங்கிக் கணக்கில் வரவிடப்படாத விவசாயிகள் இருப்பின் உடனடியாக தங்கள் பகுதி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குவதன் ஊடாக உரமானியக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம்என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# போதைப்பொருள் குற்றச் செயல்களுக்கு எதிராக செயற்பட்ட பொலிஸார் கௌரவிப்பு





(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் போதைப்பொருள் விநியோகக் குற்றச் செயல்களுடன் ஈடுபட்டவர்களுக்கு எதிராக செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கௌரவிக்கப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் தற்போது வரை கஞ்சா, ஹெரோயின் ஆகிய போதைப்பொருட்கள் விநியோகம் மற்றும் குற்றச் செயல்களுடன் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கலந்து கொண்டிருந்தார். மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் தற்போது வரை மீட்கப்பட்ட போதைப்பொருட்கள் மற்றும் குற்றச் செயல்களுடன் ஈடுபட்டவர்களை கைது செய்த பொலிஸ் அதிகாரிகள் குறித்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டதோடு பணப்பரிசு மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி தெரிவு செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனினால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வுகளில், பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15-281)

# கசிப்புடன் இருவர் கைது; மோட்டார் சைக்கிள் கைப்பற்று

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பெரிய குளம் கிராமப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட 40 லீற்றர் கசிப்பை தமது உடைமையில் வைத்திருந்த 2 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் கசிப்பை கடத்திச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவின் பொலிஸ் அணியினர் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பெரிய குளம் கிராமப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட கசிப்பு 40 லீற்றரை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற 2 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறுதருமபுரம்பொலிஸ் நிலையம் நோக்கி பயணித்த போது நெத்தலியாற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




# அக்கராயன் காட்டில் சட்டவிரோதமான முறையில் பாலை, முதிரை மரங்கள் அழிப்பு

## பெரிய மரங்கள் மர்ம குறியீடுகள் மூலம் அடையாளம்



(கொழும்பு)

கிளிநொச்சி, அக்கராயன் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் காடுகள் அழிக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

நீண்ட பெருங்காட்டு பகுதிக்குள் நுழையும் அடையாளம் தெரியாத கும்பலொன்று அப்பகுதியில் உள்ள பாலை, முதிரை உள்ளிட்ட பெறுமதியான மரங்களை இவ்வாறு தறித்து அழித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்தக் காட்டு பகுதியிலுள்ள பெரிய மரங்களில் மர்மக்குறியீடுகள் அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்தோடு குறித்த அடையாளம் தெரியாத கும்பல் அந்தக் காட்டுப் பகுதியிலேயே தங்கி இருக்கும் தடயங்களும் அங்கு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இயற்கைக்கு விரோதமான செயற்பாடுகள் தொடர்ந்தால் குறித்த மாவட்டம் இயற்கை அனர்த்தங்களுக்கு அதிகளவில் முகம்கொடுக்க வேண்டி வரும் சாத்தியக்கூறு காணப்படுவதாக பொதுமக்கள்கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும், இந்த மாவட்டம் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் கடும் வரட்சி நிலையை எதிர்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# வருடாந்த பரிசளிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பூநகரிக் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தினுடைய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை முதல்வர் திருமதி சூரியகுமாரி இராஜேந்திரம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் கலந்து கொள்ளவுள்ளார்.(2-315)

# டெங்கு நுளம்பு பெருக்கமற்ற பாடசாலை; கிளி/விவேகானந்த வித்தி.முதலாமிடம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் "ஒன்றிணைவோம், செயற்படுவோம்" எனும் கருப்பொருளின் கீழ் டெங்கு நுளம்பு பெருக்கமற்ற பாடசாலைத் தெரிவு கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றது.

இதற்கமைய டெங்கு நுளம்புப் பெருக்கமற்ற பாடசாலைகளுக்கிடையிலான 2017 ஆம் ஆண்டிற்கான மாவட்ட மட்ட ரீதியிலான தெரிவில் கிளி/விவேகானந்த வித்தியாலயம் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டமைக்காக நினைவுச்சின்னம் சுகாதார திணைக்களத்தினால் அண்மையில் வழங்கப்பட்டது. இந் நினைவுச்சின்னத்தை பாடசாலை முதல்வர் ஜெயலட்சுமி மாணிக்கவாசகம் பெற்றுக்கொண்டார். (2-271)

# வாகனங்களை மறித்து சோதனை



(பனிக்கன்குளம்)

மாங்குளம் பொலிஸாரினால் வாகனங்கள் மறித்து சோதனையிடும் நடவடிக்கை ஒன்று இடம்பெற்றது. இச் சம்பவம் நேற்று நடைபெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அண்மைய காலங்களில் வடக்கில் போதைப் பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத தொழில்கள், கலாசார சீரழிவு நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அந்தவகையில் விசேடமாக போதைப்பொருட்கள் விற்பனை அதிகரித்துள்ள நிலையில் மாங்குளம் நகர்ப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த அனைத்து பேருந்துகள், வாகனங்கள் என்பன நிறுத்தி சோதனையிட்டதோடு பயணிகளின் பயணப் பைகளும் சோதனையிடப்பட்டன.

அந்தவகையில் அண்மையில் தொடர்ச்சியாக கஞ்சா உள்ளிட்டவை பொலிஸாரிடம் சிக்கி வரும் நிலையில் இந்த விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

# 'உடையார் கரம்பன்' சிறிய நீர்ப்பாசனக் குளம் தனிநபர் ஆக்கிரமிப்பு; பொதுச்சொத்து அழிப்பு

## விடுவித்துத்தருமாறு வடக்கு விவசாய அமைச்சருக்கு கடிதம்

(மல்லாவி)

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட மகாறம்பைக் குளப் பிரதேசத்தில் உடையார் கரம்பன் என்று அழைக்கப்படும் சிறிய நீர்பாசனக்குளம் தனி நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மக்கள் பயன்பாட்டுக் குளத்தை விடுவித்துத் தருமாறு கோரி பாதிக்கப்பட்ட மக்கள், மகா றம்பைக் குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் இணைந்து மகஜர் ஒன்றை வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் க.சிவநேசன் மற்றும் வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் உட்பட வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்த சிறிய நீர்ப்பாசனக் குளமானது சுமார் 20 ஏக்கர் அளவில் நீர்ரேந்து பிரதேசத்தைக் கொண்டதுடன் சுமார் 50 ஏக்கருக்கு மேல் வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடிய இந்த குளத்தை தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து குளத்தின் அணைக்கட்டு மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய்கள், குளத்தில் இருந்து நீரை வெளியேற்றும் துருசுப் பகுதி உபகரணங்கள் உட்பட பல கோடி ரூபா பெறுமதியான பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் ஆகி யோர் இணைந்து அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருவது,

எமது கிராமமான மகாறம்பைக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மேற்குப் பிரிவிலுள்ள புளியடிப் பிள்ளையார் வீதிக்கு தெற்கு பக்கமாக உடையார் கரம்பன் என்று அழைக்கப்படும் குளம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

இக்குளத்திற்குரிய நீர் வரத்தானது மகாறம்பைக் குளம் தெற்கைச் சார்ந்த அகத்தியர் வீதி, மதுரை வீரன் வீதி, பாடசாலை வீதி ஆகிய பகுதிகளில் இருந்து மழைகாலத்தில் வருகின்ற மழைநீர் சேகரிக்கப்பட்டு குளத்திற்கு வடக்குப் பக்கமாக விவசாயக் காணிகளில் சிறுபோக வேளாண்மை செய்யப்பட்டு வந்த நிலையில்,

இது தொடர்பான தகவல்களை இளம் தலைமுறையினருக்கும் மற்றும் உரிய தரப்பினருக்கும் தெரியாமல் மறைக்கப்பட்டுள்ளது.

யுத்த சூழ்நிலைகளால் 1996 ஆம் ஆண்டு மக்கள் இடம் பெயர்ந்த நிலையைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்ட சில தனி நபர்களால் இக் குளத்தின் அணைக் கட்டை நீர் மூலமாக்கி குளத்தைக் கையகப்படுத்தி வயல் போல மாற்றி அமைத்துள்ளார்கள்.

மழைக் காலங்களில் பாய்ந்துவரும் மழைநீரானது தேங்க இடமில்லாமல் வீதியை ஊடறுத்து மேவிப்பாய்ந்து அருகிலுள்ள குடியிருப்புகளுக்குள் செல்வதால் மக்கள் பெரும் துன்பம் அடைகிறார்கள்.

பாய்ந்துவரும் மழை நீரானது வீதிக்கு மேலாய் பாய்வதால் வீதியூடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

அத்துடன் பயன் தரும் பயிர்களுக்கு பாரிய சேதம் ஏற்படுவதால் விவசாயிகள் பெரும் இழப்பை எதிர் கொண்டு வருகின்றனர்.


எனவே விவசாயிகளின் நலன் கருதி இக் குளத்தை மீளப் புனரமைத்து விவசாயத்திற்குரிய வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதுடன், மழை நீர் வீதிக்கு மேலால் பாய்ந்து செல்வதால் மண் அரிப்பு ஏற்படும் போது, இவ்வீதியை செப்பனிட வருடாந்தம் பல ஆயிரம் ரூபாய்கள் செலவிட வேண்டியிருப்பதால் இதனையும் கருத்தில் கொண்டு மிக விரைவாக நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




30 இலட்சம் பெறுமதியான

# நாற்று நடவு செய்யும் இயந்திரங்கள் ஐந்து பிரதேச செயலகங்களுக்கு வழங்கல்

(மல்லாவி)



ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் 30 இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்து நாற்று நடவு செய்யும் இயந்திரங்கள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட ஐந்து பிரதேச செயலகங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் தலா 6 இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்து நாற்று நடவு செய்யும் இயந்திரங்கள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி-கேதீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதனை அரசாங்க அதிபர் துணுக்காய், மாந்தைக் கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய ஐந்து பிரதேச செயலகங்களுக்கு வழங்கி வைத்துள்ளார்.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற நாற்று நடவு செய்யும் இயந்திரங்கள் அந்த அந்தப் பகுதி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற நாற்று நடவு செய்யும் இயந்திரங்களைப் பயன்படுத்தி நாற்று நடவு செய்யும் ஆரம்ப வைபவம் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கோடாலிக் கல்லூ கமக்கார அமைப்பு பிரிவில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குணநேசன் தலைமையில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது, முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். (2-15)

# புகையிரத பாதுகாப்பு கடவைகளை 'அமைப்பது குறித்து மாவட்ட பொறியியலாளரே நடவடிக்கையெடுக்க வேண்டும்

## கிளிநொச்சி புகையிரத நிர்வாகம் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளுக்கு பாதுகாப்புக்கடவைகளை அமைக்குமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏ-9 வீதியின் திருமுறிகண்டி தொடக்கம் முகமாலை வரைக்குமான பகுதிகளில் புகையிரத வீதிகளை குறுக்கறுத்துச்செல்கின்ற 35இற்கும் மேற்பட்ட வீதிகளுக்கு பாதுகாப்புக்கடவைகள் அற்ற நிலையில் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற வீதிகளில் அதிகளவான வீதிகளில் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் பாதுகாப்பற்ற புகையிரக்கடவைகளுக்கு பாதுகாப்புக் கடவைகளை அமைக்குமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ் வரனாலும் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டதுடன் புகையிரத வீதிக் கடவைகள் பாதுகாப்புத் தொடர்பில் பிரதேச சபையிடமோ அல்லது ஏனைய சம்பந்தப்பட்ட திணைக்களங்களிடம் கையளிக்கப்பட்டு பாதுகாப்புக் கடவை அமைக்க வேண்டும் எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பில் கிளிநொச்சி புகையிரத திணைக்கள நிர்வாகத்திடம் வினவியபோது, இவ்வாறான புகையிரக்கடவைகள் அமைப்பது தொடர்பில் மாவட்டப் பொறியியலாளரே நடவடிக்கை எடுக்கவேண்டும். மாவட்டப் பொறியியலாளர் அலுவலகமானது இப்பிரதேசத்தில் இல்லையெனவும் தற்போது அநுராதபுரத்தில் இயங்கி வருவதாகவும் மேற்படி திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (2-315)

# சர்வதேச மனிதவுரிமைகள் நாள்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் சர்வதேச மனித உரிமைகள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சர்வதேச மனிதவுரிமைகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் நாள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் செயலாளர் தி.சிவரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் பங்குத்தந்தை எஸ்.ஜெ.துரைரட்ணம், வைத்தியக் கலாநிதி எம்.சிறிதர், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அமரர் நாகலிங்கம் நந்தகுமார் தொடர்பான நினைவுரையை யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரைவுரையாளர் கே.ரதிதரனும் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் மனித உரிமைகளும் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக ஊடகக்கற்கை நெறிகள் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ரகுராம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# அனர்த்தம் ஏற்படுமாகில் எதிர்கொள்வது தொடர்பில் முன்னாயத்தத் திட்டம் வகுப்பு

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது



(பரந்தன்)

அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த விசேட கலந்துரையாடல் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், இடர் முகாமைத்துவ அதிகாரிகள், முப்படையினர், பொலிஸார், திணைக்களம் சார் அதிகாரிகள், தொண்டு நிறுவன பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அனர்த்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் மேற்கொள்ளக்கூடிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், முன்னேற்பாடுகள் தொடர்பிலும் திட்டமிடப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் அரசாங்க அதிபர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

அனர்த்த முன்னேற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கு ஏற்ப திட்டகள் வகுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்தில் 24 மணி நேரமும் இடர் முகாமைத்துவ நிலையம் செயற்பட உள்ளதாகவும், மக்கள் எந்த நேரத்திலும் தொடர்பை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.


மக்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்களாவன: - 021 228 5330, 077 232 0528, 021 228 3965.

(2-312)




சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி கல்வி வலய விசேட கல்வி பிரிவும், டெப்லிங் நிறுவனமும் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு நடைபயணம் கூட்டுறவு சபை மண்டபம் வரை சென்றது. தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டதை அடுத்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மெதடிஸ்த மிசன் திருச்சபையின் பேராயர் பேரருட் திரு ஆசிரி பெரேரா கலந்து கொண்டதுடன், அருட்தந்தையர்கள், கல்வி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- பரந்தன்,கண்டாவளை செய்தியாளர்கள்)

# கலைத் தரிசனம்



## பாடலாசிரியர் முல்லைச் செல்வன் அவர்களுடனான சந்திப்பு

**ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பாடல்களாலும் தெருவெளி நாடகங்களாலும் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டியவர் இருநூறிற்கு மேற்பட்ட எழுச்சிப் பாடல்களை எழுதியவர். இவரது அனைத்துப் பாடல்களும் ஈழத்திலும் புலம்பெயர் தேசத்திலும் மக்களால் விரும்பிக் கேட்கப்பட்ட பாடல்களாகும். குறிப்பாக ஆண்டாண்டு காலமதாய்..., சங்கங்கள் கவிபாடி..., எங்கள் அண்ணன் பிரபாகரன்...,என்னடா இளைஞனே..., ஆதியாய் அநாதியாய் அவதரித்த செந்தமிழ்... ஆகிய பாடல்கள் இவருக்குப் பெரும் புகழீட்டிக் கொடுத்தது. இருபதிற்கு மேற்பட்ட தெருவெளி நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் ஆற்றுகை செய்தார். போராட்டக் காலத்தில் இவரது நாடகங்களுக்காக பார்வையாளர்கள் அலை மோதினர். இவரது நாடகங்களால் பல இளைஞர், யுவதிகள் விடுதலைப் போராட்டத்தின் பங்குதாரர்களாக மாறினர். கவிஞராக, பாடலாசிரியராக, இசையமைப்பாளராக, எழுத்தாளராக எனப் பல்துறைகளில் சிறந்து விளங்கும் இவர் யாவருடனும் இன்முகத்துடன் பழகி முகங்கோணாது வரவேற்று என்றுமே தற்புகழ்ச்சி கொள்ளாத இந்த முதுபெரும் பாடலாசிரியர் 1945.05.04 ஆம் திகதி கணுக்கேணிக் கிராமத்தில் பிறந்தார்.**

**பெ.செல்லக்குட்டி என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் முல்லைச்செல்வன் என்ற புனைப் பெயரில் கலை இலக்கிய உலகில் அழைக்கப்பட்டார். பாடலாசிரியர் முல்லைச்செல்வன் அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.**

## ஆண்டாண்டு காலமதாய் நாம் ஆண்டுவந்த பூமி...

**தாங்கள் கலை இலக்கியத் துறைகளில் சிறந்து விளங்குகின்ற ஒரு விற்பன்னராகவுள்ளீர்கள். அந்த வகையில் இந்தத் துறைகளில் தங்களின் பிரவேசம் பற்றி...?**

நான் தரம் நான்கில் கற்றுக் கொண்டிருந்த போது சிறுகதைகள், நாடகங்கள் எழுத வேண்டும் என்ற ஓர் ஆவல் என்னுள் உதயமானது. அதற்குக் காரணம் என்னோடு கல்விபயின்ற மாணவர்களின் மூலம் நான் வாசித்து மகிழ்ந்த கல்கண்டு, குமுதம், ஆனந்த விகடன் போன்ற வார சஞ்சிகைகளே. நான்காம் வகுப்புக்கு மேல் எனது பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத நிலையிலும் பத்திரிகைகள், புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தேன். பொது நூல் நிலையங்களிலும் நண்பர்களிடம் இரவல் வாங்கியும் என் படிப்பறிவை வளர்த்துக் கொண் டேன். "கண்டது கற்க பண்டிதன் ஆவான்" என்ற பழமொழிக்கிணங்க என்னை ஒரு எழுத்தாளனாக இந்த சமூகத்திற்கு அறிமுகப்படுத்த எனது வாசிப்பின் மீதுள்ள ஆர்வமே காரணமாய் அமைந்தது. மற்றும் இசை, நாடகம் ஆகிய துறைகளில் நான் ஆர்வம்கொள்ள காரணமாய் இருந்தவர் எனது மூத்த சகோதரராவார். அன்று S.P. அருள் என்ற பெயரில் கலைத்துறையில் பிரபல்யமாக விளங்கியவர் அவர். தனது சிறு வயதிலேயே புராண, இதிகாச நாடகங்களில் பாத்திரம் ஏற்று நடித்து தனது நடிப்பாற்றலையும் பாடும் திறனையும் வெளிப்படுத்தி மக்களிடையே பாராட்டைப் பெற்றிருந்தார். அவருடைய வாலிப வயதில் "கணவனே கண்கண்ட தெய்வம்", "நானேராஜா" போன்ற பல நவீன நாடகங்களில் கதாப்பாத்திரம் ஏற்று நடித்து மக்கள் மத்தியில் புகழோடு விழங்கியவர்.

ஆர்மோனிய இசையை முறையோடு கற்றவர். எங்கள் வீட்டில் அவர் வீணை வாசிக்கும் போது நான் அதை ஆர்வமுடன் செவிமடுப்பேன். எனக்குள் இசை ஞானம் இருந்ததன் பயனால் அண்ணா இல்லாத சமயங்களில் வீணைப் பெட்டியை எடுத்து பாட்டு வாசித்துப் பார்ப்பேன். அப்போதெல்லாம் என் அம்மா என்னைப் பார்த்து நண்டூர நரியூர விளையாடுவதை விட்டுட்டு ஓடு தோட்டத்திற்கு என்று கேலி செய்வார். எனக்கு திருமணம் ஆன பின் எனது ஊர் இளைஞர்களை ஒன்றுசேர்த்து கண்ணன் கலாமன்றம் என்ற பெயரில் ஒரு மன்றத்தை உருவாக்கி என் தலைமையில் நானே கதை, வசனம் எழுதிய நாடகங்களை நானே நெறிப்படுத்தி அரங்கேற்றி அதன் மூலம் கிடைத்த பணத்தில் இசைக் கருவிகளான ஆர்மோனியம், தபேலா, தாளம் போன்றவற்றை வாங்கி ஆர்மோனியம் வாசிப்பதை ஓரளவு கற்றுக்கொண்டதுடன் பின்னாளில் எனக்கு அரங்கங்களில் கிடைத்த வாய்ப்புக்கள் மூலம் வாசிக்கும் திறமையை வளர்த்துக்கொண்டேன். எனக்கு மேடையிலே ஏறி வாசிக்குமளவிற்கு திறமை இருந்தாலும் இது ஒரு குருவில்லா வித்தைபாழ் என்பது போல் என் வித்தையும் ஏகலைவன் கற்ற வித்தை போன்றதுதான். முறைப்படி மற்றவர்களுக்கு கற்றும் தரும் தகுதியை நான் பெற்றிருக்கவில்லை. எனக்குள் கலைத் திறமைகள் இருக்கின்றன என நீங்கள் கருதினால் அவை யாவும் இறைவன் எனக்குக் கொடுத்த வரமே. அதனால்தான் புகழ் எனும் போதைக்கு இன்றுவரை நான் மதிமயங்கவில்லை. "எல்லாப் புகழும் இறைவனுக்கே".

**இயல், இசை, நாடகம் இம்மூன்று துறைகளில் நீங்கள் எந்தத் துறையில் நாட்டம் கொண்டிருந்தீர்கள்?**

ஆரம்பத்தில் நாடகத்துறையில் தான் நான் ஈடுபாடு கொண்டிருந்தேன். 1960 ஆம் ஆண்டு காலகட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்காக 15-30 நிமிட நாடகங்கள் எழுதிக் கொடுத்து நாடகம் எழுதும் அனுபவத்தை வளர்த்துக் கொண்டேன். பாடசாலை மேடைகளில் எனது நாடகங்களை மாணவர்கள் அரங்கேற்றிய போது மேலும் மேலும் நாடகங்களை எழுத வேண்டும் என்ற உத்வேகத்தை எனக்குள் ஊட்டியது. 1975 இற்கு பின் முழு நீள நாடகங்களாக உரிமைக்காக எனும் கற்பனை சரித்திர நாடகம், பாசத்திற்கோர் பரதன், இராமாயண நாடகம், ஒற்றுமையே உயிர் நாடி, சிந்தித் தால் சிரிப்பு வரும் இவை போன்ற சமூக சீர்திருத்த நாடகங்களை நானே எழுதி நெறிப்படுத்தி அரங்கேற்றினேன். இன்னும் சில நாடகங்களை எழுதியிருந்தேன். ஆனால் அவற்றை நெறிப்படுத்தி அரங்கேற்றும் அளவிற்கு என்னிடம் பொருளாதாரமோ பிற உதவிகளோ அமைந்திருக்கவில்லை.

**தாங்கள் இதுவரை புனைந்த எழுச்சிப்பாடல்கள் யாவும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருந்தன. அந்தப் பாடல்கள் பற்றி...?**

என் சிறுவயதில் இருந்தே எமது தமிழினம் பேரினவாதிகளால் சீரழிந்து வந்ததைக் கண்டும் கேட்டும் அனுபவித்தும் வந்தவன் நான். ஒரு காலத்தில் தலைநிமிர்ந்து வாழ்ந்த எங்கள் தமிழினம் இன்று அடிமை எனும் இருளில் மயங்கிக் கிடக்கிறது. அவர்களை எழுச்சிபெற வைப்பதே என்போன்ற கலைஞர்களின் கடமை என்பதை உணர்ந்தேன். அந்த உணர்வின் வெளிப்பாட்டில் உருவானது தான் எனது எழுச்சிப் பாடல்கள். அந்த வகையில் இந்த மண்ணில் நிகழ்ந்த விடுதலைப் போராட்டக் காலத்தில் 200 இற்கு மேற்பட்ட எழுச்சிப் பாடல்களை இயற்றியுள்ளேன். அவற்றில் 50 இற்கு மேற்பட்ட பாடல்கள் "யாகராகம்", "போர்ப்பறை" போன்ற இறுவெட்டுக்களிலும் வேறுபல இறுவெட்டுக்களிலும் வெளிவந்தன. காலஞ்சென்றவர்களான சாந்தன், சிட்டு, குட்டிக் கண்ணன் போன்ற முன்னணிப் பாடகர்களும் மற்றும் பல முன்னணிப் பாடகர்கள் என் பாடல்களைப் பாடியுள்ளனர். இதைவிட மேற்படி காலகட்டத்தில் பல தெருவெளி நாடகங்களையும் நெறிப்படுத்தி அரங்கேற்றியுள்ளேன். அதுமட்டுமன்றி "இது எங்கள் தேசம்", "பாசமா தேசமா" என்ற இரு திரைப்படங்களுக்கு கதை வசனம், பாடல்கள் எழுதியுள்ளேன்.

குறிப்பாக ஆண்டாண்டு காலமதாய் ஆண்டு வந்த பூமி..., எங்கள் அண்ணன் பிரபாகரன்..., என்னடா இளைஞனே இன்னுமென்ன அச்சமா, சங்கங்கள் கவி பாடி அங்கங்கள் விளையாடி..., புலி மாமா..., தீயினில் எரியாத தீபங்களே, என் அன்னைப் பூமியே... ஆகிய பாடல்களை குறிப்பிடலாம். நான் எழுதிய எழுச்சிப் பாடல்களில் ஆதியாய், அநாதியாய் அவதரித்த செந்தமிழ்... இந்தப் பாடல் என் மனதை மிகவும் கவர்ந்த பாடல். பரணி பாடுவோம் இறுவெட்டில் பாடகர் எஸ்.ஜி. சாந்தன் அவர்கள் பாடிய பாடல் இது. இந்தப் பாடலை கேட்டு பண்டிதர் பரந்தாமன் சேர் உட்பட பலரும் பாராட்டினார்கள்.

**ஈழ விடுதலை போராட்ட வரலாற்றில் தங்களின் தெருவெளி நாடகங்கள் கணிசமான பங்களிப்பைச் செய்திருந்தன. தாங்கள் எழுதி நெறியாள்கை செய்த தெருவெளி நாடகங்கள் பற்றி...?**

இரும்புத் திரை, இது கனவல்ல, ஒளி பிறந்தது, முடிவில் ஒரு விடிவு, பாசமா தேசமா?, காலம் வெல்லும் போன்ற இருபது தெருவெளி நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்தேன். இந்நாடகங்களை பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மேடைகள் ஆற்றுகை செய்திருந்தோம். பார்வையாளர்களும் விரும்பிப் பார்த்தார்கள். ஒரு நாளைக்கு 10 மேடைகளுக்கு மேலே கூட ஆற்றுகை செய்திருக்கிறோம். 11 வயது நிரம்பிய குட்டிக் கண்ணனும் எனது நாடகங்களில் நடித்திருந்தார். இன்னும் பல முன்னணி கலைஞர்கள் இணைந்து தெருவெளி நாடகத்தை நிகழ்த்தினோம்.

**தாங்கள் 1991 ஆம் ஆண்டு தேசியத் தலைவரினால் பரிசையும் பாராட்டையும் பெற்றீர்கள். அதனைத் தொடர்ந்து நீங்கள் கலை இலக்கியத் துறைகளில் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?**

எனது கலைத்துறைப் பணிக்காக 1991 மற்றும் 1993 காலப் பகுதிகளில் தேசியத் தலைவர்களின் கரங்களினால் பரிசில்களும் பாராட்டும் பெற்றேன். 2005 ஆம் ஆண்டில் தேசியத் தலைவர்களால் வழங்கப் பெற்ற தேசிய விருதையும் பெற்றிருந்தேன். இதைவிட 50 இற்கு மேற்பட்ட மேடைகளில் எனது கலை ஆக்கங்களுக்கான பரிசில்களையும் கௌரவிப்பையும் பெற்றுள்ளேன். மேலும் மீள்குடியமர்ந்ததற்குப்பின் 2013, 2014, 2015, 2016 இந்தக் காலகட்டங்களில் முறையே சிலாவத்தை, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை வித்தியானந்தா, குமுழமுனை போன்ற இடங்களில் மூத்த கலைஞர்கள் என்ற ரீதியிலும் வாத்தியக் கலைஞர் என்ற வகையிலும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளேன். மேற்படி காலகட்டத்தில் குமுழமுனை கற்பக விநாயகர், திருமலை அல்லி முத்துமாரி அம்மன் கோவில்களில் வெளியிடப்பட்ட இறுவெட்டுக்களில் பாடல்களை இயற்றி பாராட்டைப் பெற்றேன்.

**பல்துறை விற்பன்னரான தாங்கள் கலை இலக்கிய உலகிற்கு மனம் திறந்து கூறுவது?**

முதலில் கலை என்றால் என்ன? அதன் அர்த்தம் என்ன? தமிழ் ஓர் அற்புதமான மொழி, மிகப் பழைமை வாய்ந்த மொழி, எழுத்துக்களை அதிகமாகக் கொண்ட மொழி, ஒரு சொல்லுக்குப் பல பொருள் பொதிந்த மொழி, உலகம் போற்றும் பொதுமறையான திருக்குறளுக்கு பரிமேலழகர் விளக்கவுரை எழுதுவதற்கு பொருள் பொதிந்த மொழி. அந்த அற்புதமான மொழி கலை என்ற சொல்லுக்குத் தரும் அர்த்தம் தான் என்ன? உதாரணமாக நீ போட்டிருக்கும் வேட்டியை கலை என்று சொன்னால் அதற்கு அகற்று என்று பொருள். நமக்குத் தீங்கு புரிய வரும் காரணிகளையும் கலை என்கிறோம். அதற்கு துரத்து என்று பொருள். ஒரு காட்சியில் அல்லது சம்பவத்தில் மனம் ஈர்க்கப்பட்டு நமது உடலில் ஏற்படும் ஒரு வித ஆட்டத்திற்கு கலை என்கின்றோம். இதை உரு என்று சொல்கின்றோம். ஒருவனுக்கு ஒரு செயலில் அல்லது ஒரு துறையில் சிறப்புடன் மிளிரும் போது அதையும் அவருக்கு கைவந்த கலை என்கின்றோம். நான் அறியாத இன்னும் பல அர்த்தங்கள் கலைக்கு இருக்கலாம். இதில் எந்த அர்த்தத்திற்கு சொந்தம் ஆகின்றது. என்னைக் கேட்டால் எல்லா அர்த்தங்களும் கலை என்ற சொல்லிற்குள் சங்கமம் ஆகி இருக்கின்றது என்றுதான் சொல்லுவேன்.

இன்று கலையை நாடுபவர்களும் ஏற்கனவே இதில் பிரகாசிப்பவரும் இந்தக் கலையின் மூலம் எதைச் சாதிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்று சொல்லப் போனால் இந்தக் கலை எனும் சாதனத்தை நமது சுயநலத்திற்காகவும் புகழுக்காகவுமே பயன்படுத்த முனைகின்றோம்.

மானிடத்தின் மீட்சிக்காகவும் மனித நேயத்தை கட்டிக் காக்கவும் பயன்படுத்துபவர்கள் மிகச் சிலரே. உதாரணமாக இன்று ஒரு பெற்றோருடன் உங்கள் பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டால் அவர் ஒரு வைத்தியராக, விஞ்ஞானியாக, இஞ்சினியராக, தொழிலதிபராக, உயர்ந்த பதவி வகிப்பவராக என்று தான் சொல்வார்கள். எதிர்பார்ப்பார்கள். ஒரு உத்தமனாக, உயர்ந்த சிந்தனை உடையவனாக, சத்தியசீலனாக இருக்க வேண்டும் என்று எந்தப் பெற்றோர்களாவது சிந்திக்கின்றார்களா? காரணம் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நிலைமை மாறி எப்படியும் வாழலாம் என்ற நிலைக்கு மனித மனங்கள் மாறிக்கொண்டு இருக்கின்றன.

வளர்ந்து வரும் விஞ்ஞானமே அதற்கு முழுப்பொறுப்பு என்றால் என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை நாம் தவறான வழிகளில் கையாள்கின்றோம் என்பதுதான் உண்மை.


மேற்படி கலைத்துறையில் ஈடுபட்டு இருக்கும் அனைத்து உள்ளங்களும் மானிட சமூகத்தில் அமைதிக்காகவும் சமாதானமான வாழ்வுக்காகவும் தமது ஆக்கங்கள் அமைய வேண்டும் என்று சிந்திப்பதில்லை. அப்படி சிந்திப்பார்களே ஆனால் பயங்களும் நெருக்கடிகளும் சூழ்ந்து வரும் மனித சமூகத்தில் ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்க முடியும் என நான் எண்ணுகின்றேன்.

இருப்பினும் இந்த நேரத்தில் ஒரு கீதா உபதேசம் என் நினைவுக்கு வருகின்றது. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கின்றது. எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும். இதை ஏன் சொல்கின்றேன் என்றால் 2017 வருடங்களுக்கு முன் மனித இனத்தின் பாவங்களை நீக்கும் பொருட்டு இயேசு கிறிஸ்துவானவர் மண்ணில் அவதரித்து சிலுவையில் அறையப்பட்டு தனது இரத்தத்தை சிந்தினாரே. ஆனாலும் இன்று வரை நாம் பாவிகள் என்று தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

யார் பாக்கியவான்களாக மாறி இருக்கிறோம். ஒன்றை மட்டும் நான் உணர்கின்றேன். பரம்பொருள் ஒரு மகா சமுத்திரம். அதில் ஒரு சிறுதுளிதான் நான். அந்தப் பரம்பொருளின் இரகசியத்தை அளவிடும் அருகதை எனக்கேது. எல்லாப் புகழும் இறைவனுக்கே.

**நேர்காணல்: ஜெயம் ஜெகன்**

# சுதந்திரக் கட்சி- சுதந்திர முன்னணி உயர்மட்ட உறுப்பினர்கள் சந்திப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளனர்.

குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்தி குறித்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக இதில் கலந்து கொண்ட அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இதுவரை 75,000 புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகள் விநியோகம்

(கொழும்பு)

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட டிஜிற்றல் தொழில்நுட்பத்திலான தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் பணியில் இதுவரை 75 ஆயிரம் புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் மக்கள் ஆர்வத்துடன் இருப்பதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணத்திலக்க தெரிவித்தார்.

நாளாந்தம் சுமார் 1500 பேருக்கு டிஜிற்றல் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். 15 வயதை பூர்த்தி செய்தவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை கோருவோருக்கும் தமது தேசிய அடையாள அட்டை சீர்குலைந்து காணாமல் போனோர் உள்ளிட்டோருக்கும் இந்த ஸ்மாட் தேசிய அடையாள அட்டையை பெற்று கொள்ளமுடியும். இந்த ஸ்மார்ட் தேசிய அடையாள அட்டை கடந்த ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


செண்.ஜோன் அம்புலன்ஸ் சேவையில்

St Jhon Ambulance SRI LANKA

## தொழில் வெற்றிடம்

யாழ்.மாவட்ட செண்.ஜோன் அம்புலன்ஸ் இல் கீழ்க்தறிப்பிட்ட சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு

1. கணனி தட்டெழுத்தாளர்
2. எழுதுவினைஞர்
3. அம்புலன்ஸ் சாரதி
   (A தர சாரதி அனுமதிப் பத்திரம் அவசியம்)

தகுதியானோர் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 10.12.2017 அன்று பி.ப. 3.00 மணிக்கு இல.161, 1ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள செண்.ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு சமுகம் தரவும்.

மேலதிக விபரங்களுக்கு அவசர அம்புலன்ஸ் சேவை
தொ.பேசி.இலக்கம்: 021 321 4444

திரு.செ.செல்வரஞ்சன்
மாவட்ட ஆணையாளர்,
செண்.ஜோன் அம்புலன்ஸ்,
யாழ். மாவட்டம்.

(1604)


# விமலின் வீரகுமார மைத்திரி அணியில்

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்திய அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளதாக அவர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்தமைக்கான காரணம் என்ன என்பதை தெளிவுபடுத்தி, எட்டுப் பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் முக்கிய தலைவர்களில் வீரகுமார திஸாநாயக்கவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ...
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது *இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

(சி9675)



## லப்றடோர் குட்டி விற்பனைக்கு

லப்றடோர் (Labrador) இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொ.இல: 071 157 1835



## சின்மயாமிஷன் நடத்தும் இளைஞர்களுக்கான வதிவிட முகாம்.

தற்கால இளைஞர்கள் பலர் சரியான வழிகாட்டலின்மையால் தவறான பாதையில் தம்மை இட்டுச் செல்கின்றார்கள். மனித வாழ்வில் மன எழுச்சி என்பது முக்கியம் பெறுகிறது. இளைஞர் வாழ்வில் சாதகமான மன எழுச்சியை உருவாக்குதல் சிறந்த பலனைத் தரக்கூடியது. இதனைச் செயற்படுத்துவதற்கு "எனது மனம் எனது பலம்" என்ற எண்ணக்கருவைக்கொண்ட இந்த வதிவிட முகாமுக்கு வாருங்கள்... உங்கள் பதிவை மேற்கொள்ளுங்கள்...!

**இளைஞர்களுக்கான 3 நாள் வதிவிட முகாம்**

**12-18 வயது**

டிசெம்பர் 22
(4.00p.m-25 (4-00p.m) வரை

முகாம் பதிவுக் கட்டணம் 600/=



வரையறுக்கப்பட்ட பங்குபற்றுநர்கள் என்பதால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்!

இறுதித் திகதி
டிசெம்பர்-10 ஞாயிறு

வருவோம்
சிந்திப்போம்
செயற்படுவோம்

இளைஞர் முகாம்.
"எனது மனம் எனது பலம்" (22.12.2017-25.12.2017)
நாம் தயாராக இருப்பின், இப்பொழுதே, இந்த கணத்திலேயே மிகப்பெரிய செயல்களை நம்மால் செய்ய இயலும். இதுதான் உண்மை. ஆகவே நாம் முயற்சித்தே ஆக வேண்டும்.

076 854 3153 (Krishna)
021 222 3447
info@chinmayamissionjaffna.org
www.chinmayamissionjaffna.org
Chinmaya Mission.Jaffna.

யாழ்.சின்மயாமிஷன்
இல.09, செட்டித்தெரு
ஒழுங்கை, நல்லூர்,
யாழ்ப்பாணம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா:49
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/8013

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா: 25 செவ் 1 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:IT/லண்டன் NOTPR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/8014

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா: 33 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: B/8015

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா: 57செவ் 1 இல்
உயரம்: 5'4'
தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்
தொ.இ: B/8016

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8038

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூராடம்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8040

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/தாதி (அரச)
தொ.இ: G/8042

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூசம் செவ் 1 இல்
தகைமை/தொழில்:SLEAS/அரசதொழில்
தொ.இ: G/8043

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பாரதம்

## நேற்று பெய்த மழைக்கு இன்று முளைத்தவர் விஷால்



(சென்னை)

நேற்று பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான் மட்டுமே விஷால். அவருக்கு எம்மை எதிர்க்கும் வல்லமை கிடையாது என அமைச்சர் செல்லூர் ராஜு தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைதிப் பேரணியின் பின்னர் மதுரையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தாயில்லாத பிள்ளைகளாக தவிக்கும் அ.தி.மு.கவை வீழ்த்த பலரும் திட்டம் தீட்டிக் கொண்டு வருகின்றார்கள். எனினும் அவர்களுடைய எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## ரோஹிஞ்யர்களின் மீள்குடி... இரண்டு மாதங்களுக்குள் ஆ...

(ஜெனீவா)

பங்களாதேஷில் தஞ்சம் கோரியுள்ள ரோஹிஞ்யா அகதிகளின் மீள்குடியேற்ற நடவடிக்கை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படுமென மியன்மார் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டம், ஜெனீவாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோதே, ஐ.நாவுக்கான மியன்மார் தூதுவர் உவைடுலவை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.




இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'ரோஹிஞ்யா அகதிகளை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் நோக்கில், பங்களாதேஷ் அரசாங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை அண்மையில் நாம் செய்துள்ளோம். எனவே, இந்த அகதிகளின் மீள்குடியேற்ற நடவடிக்கையை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிக்க நாம் எதிர்பார்த் துள்ளோம்' என...


'ரோஹிஞ்யா அகதிகள் தமது செ... இடங்களுக்குப் பாதுகாப்பான முறையில்... திரும்பி, தங்களது வாழ்வாதார நட...

## ஜேர்மனியில் இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்து
## 8 பேர் உயிரிழப்பு


(பேர்லின்)

தெற்கு ஜேர்மனியில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். சுமார் 100 பேர் காயமடைந்துள்ளனர். முனிச் நகரில் இருந்து தென் கிழக்கே சுமார் 60 கி.மீ. தொலைவில் பேட் ஏப்ளிங் என்ற இடத்துக்கு அருகில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. எதிர்பாராதவிதமாக பயணிகள் ரயிலும் டிபி கார்கோ என்ற மற்றொரு சரக்கு ரயிலும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து குறித்து பிராந்திய ரயில் நிறுவனமான மெரிடியன் விடுத்துள்ள அறிக்கையி... இடையிலான ஒற்றைப் பாதையில் நேற்றுக் க...



## காற்று மாசு காரணமாக குழந்தைகளின் மூளை பாதிப்படையும் அபாயம்
### டில்லிக்கு ஐ.நா. எச்சரிக்கை




(டில்லி)

டில்லியில் ஏற்பட்டுள்ள காற்று மாசு காரணமாக குழந்தைகளின் மூளை பாதிப்படையும் அபாயம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக ஐ.நா. மேற்கொண்ட ஆய்வின் மூலமாகவே குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் காற்று மாசு மிக்க பகுதிகளில் குழந்தைகள் வசிப்பது தெற்கு ஆசியாவிலேயே அதிகமாக காணப்படுகின்றது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டில்லியில் காற்று மாசு தற்போது அபாய அளவையும் தாண்டிவிட்டதாகவும், இதன்காரணமாக எதிர்கால சந்ததியினர் பாரிய ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நச்சுக் காற்றினைச் சுவாசிப்பதன் காரணமாக குழந்தைகளின் நுரையீரல் மட்டுமல்லாது அவர்களது மூளை வளர்ச்சியும் பாதிப்படைந்து எதிர்காலத்தை சிதைத்துவிடும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே குழந்தைகளை காற்று அதிகமாக மாசுபட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும், முகமூடிகளைப் பாவிக்கவேண்டும் என்பதோடு, குழந்தைகளுக்கான ஊட்டச்சத்தினை அதிகரித்து நோய்ப்பாதிப்புகளில் இருந்து குழந்தைகளை காக்கவேண்டும் எனவும் ஐ.நாவின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, டில்லியில் காற்று மாசையும் அளவு அதிகரித்துவிட்டது இதனால், ஹெலிகொப்டர் மூலம் தண்ணீர் தெளிக்க வேண்டும் என பசுமை தீர்ப்பாய தலைவர் நீதிபதி ஸ்வதந்தர் குமார் அண்மையில் தெரிவித்திருந்ததையும் சுட்டிக்காட்டப்படத்தக்கது. (இ)

## பிரிட்டன் பிரதமரை கொல்ல சதித்திட்டம்
### இருவர் சிறையிலடைப்பு

(லண்டன்)

பிரிட்டன் பிரதமர் தெரேசா மேயை கொல்ல சதித்திட்டம் வகுத்ததாக இருவரை லண்டன் நகர பொலிஸார் கைது செய்து சிறையிலடைத்துள்ளனர்.

பிரிட்டன் பிரதமராக பதவி வகித்து வரும் தெரேசா மே, லண்டன் நகரில் உள்ள 10 டவுனிங் ஸ்ட்ரீட் இல்லத்தில் வசித்து வருகிறார். இருவரும் பிரதமர் தெரேசா மேயை கொல்ல சதித்திட்டம் தீட்டியதாக பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர். லண்டன் வெஸ்ட்மெய்ஸ்டர் நீதிமன்றில் அவர்களை ஆஜர்படுத்திய பின்னர் பொலிஸார் இதனைத் தெரிவித்தனர். சக்திவாய்ந்த குண்டுகள் தயாரித்து பிரதமரின் வீட்டை தாக்கி, அவரை கொல்ல சதி செய்ததாக குற்றச்சாட்டு




கடந்த மாதம் 28 ஆம் திகதி, தீவிரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் ஸகாரியா ரெஹ்மான், அகியூப் இம்ரான் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், அவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள பிரதமரின் செய்தி தொடர்பாளர், கடந்த 12 மாதங்களில் 9 தீவிரவாத தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (இ)

## ஐ.நா.அதிகாரி ஜெப்... வடகொரியா பயண...
### அமைதிப் பேச்சுவார்த்தை ஆரம்...



(பியாங்யாங்)

வடகொரியாவுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஐ.நா. அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் ஜெப்ரி பெல்ட்மேன் அந்நாட்டிற்கு சென்றுள்ளார்.

ஐ.நா. மற்றும் பல நாடுகளின் எதிர்ப்பு மற்றும் பொருளாதாரத் தடைகளையும் மீறி வடகொரியா தொடர்ந்து அணுஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், கடந்த வாரம் வடகொரியா மீண்டும் ஒரு கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணை சோதனை நடத்தியது. இந்த முறை வடகொரியாவின் ஏவுகணை தென்கொரிய வான் எல்லையில் பறந்து, ஜப்பான் கடற்பகுதியில் விழுந்தது.

இதையடுத்து அமெரிக்காவின் எந்தப் பகுதியையும் தங்களால் தாக்கமுடியும் என வட கொரியா... வித்தது. அதைத்தொடர்ந்து அமெரிக்கா ம... தென்கொரியா விமானப் படையினர் இணை... கூட்டுப்பயிற்சி நடத்தி வருகின்றன. விஜல... ஏஸ் என பெயரிடப்பட்டிருக்கும் இந்த கூட்டு... சியின் மூலம் இரு விமானப்படையின் செய... ன்கள் மேம்படும் என தென்கொரிய இராணு... தெரிவித்துள்ளது. இந்த கூட்டுப்பயிற்சியில் சுமா... இராணுவ விமானங்கள் பங்கேற்றுள் என... பயிற்சிக்காக அமெரிக்க விமானப்படை 24 ம... தாக்கும் விமானங்களை அனுப்பியுள் ளது... பயிற்சி யில் சுமார் 12 ஆயிரம் இராணுவ வீ... கலந்து கொண்டுள்ளனர். இது கொரிய தீபகற்ப... மேலும் பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்...

பரபரப்பான இந்த சூழலில் ஐ.நாவின் ...யல் விவகாரங்களுக்கான செயலாளர் ... பெல்ட்மேன், அமைதித் தூதுவராக வட... யாவிற்கு சென்றுள்ளார். இதற்காக சீனத் ... நகர் பீஜிங்கிற்கு நேற்று முன்தினம் காலை... அவர், அங்கிருந்து வடகொரியாவிற்கு சென்ற...

அவரது பயணம் குறித்து ஐ.நா. ... தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவிக்கை...

வடகொரியாவிற்கு சென்றுள்ள பெல்ட்மேன்... தரப்பு விருப்பங்கள் மற்றும் கவலைகள் குறித்து... நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை ந... கிறார். வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்... அவர் சந்திப்பது குறித்து இன்னும் முடிவ... ல்லை. மேலும் அங்கு வெளிநாட்டுத் தூத... ஐ.நா. ஊழியர்கள் ஆகியோரையும் அவர் ... க்கவுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்...

# வெளிநாடு

## யேற்றம் ஆரம்பம்!




கையை தொடங்குவதற்கு சர்வதேச சமூகத்துக்கு நாம் உத்தரவாதமளிக்கின்றோம்' எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாத இறுதியிலிருந்து மியன்மாரின் ராஹினி மாநிலத்தில் நிலவிய வன்முறை காரணமாக 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட ரோஹிஞ்யா அகதிகள் பங்களாதேஷில் தஞ்சம் கோரி யுள்ளனர். இந்த அகதிகளை, அவர்களின் சொந்த இடங்க ளில் மீள்குடியேற்றும் நடவடிக்கை தொடர்பாக பங்களா தேஷ் மற்றும் மியன்மார் நாடுகளுக்கிடையில் புரிந்து ணர்வு உடன்படிக்கையொ ன்று கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி கையொழுத்தா கியமை குறிப்பிடத்தக்கது. (இ)

...ாம்' என்றார். ...மது சொந்த ...றையில் மீளத் ...ார நடவடிக்



...றிக்கையில், ரோஸனீம் - ஹோல்ஸ்கிரசென் ...நேற்றுக் காலை 7 மணியளவில் இந்த விபத்து

## வளைகுடா ஒத்துழைப்பு அமைப்பில் திடீர் பிளவு



(குவைத் சிட்டி)

வளைகுடா ஒத்துழைப்புச்சபைக் கூட்டத்தில் கட்டார் பங்கேற்றதால், கூட்டத்தை சவுதி அரேபியா உள்ளிட்ட சில நாடுகள் புறக்கணித்துள்ளன.

ஜி.சி.சி. எனப்படும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் அமைப்பில் எண்ணெய் வளம் மிக்க 6 நாடுகள் உறுப்பினர்களாகவுள்ளன.

இந்த அமைப்பின் மாநாடு குவைத் நாட்டில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில் கட்டார் சார்பில் மன்னர் ஷேக் தமிமிம் பின் அமது அல்தானி கலந்து கொண்டார். இந்நாடு பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிப்பதாக புகார் எழுந்தது. இதையடுத்து சவுதி அரேபியா உள்ளிட்ட உறுப்பு நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து புறக்கணித்தன.

இந்த புறக்கணிப்பால் கடந்த 36 ஆண்டுகளாக ஒற்றுமையுடன் இருந்த ஜி.சி.சி. அமைப்பில் பிளவு ஏற்பட்டுள்ளது. மூன்று நாட்கள் நடக்க வேண்டிய மாநாடு ஒரே நாளில் நடந்து நிறைவடைந்ததாக தெரிய வருகிறது. (இ)

நேர்ந்துள்ளது" என அந்த நிறுவனம் தெரிவித் துள்ளது. மேலும் இவ் விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

விபத்தைத் தொடர்ந்து பல பெட்டிகள் சேதம் அடைந்துள்ளன. சேதமடைந்த பெட்டிகளில் இருந்து பயணி களை மீட்கும் பணியில் நூற்றுக்கணக்கானோர் ஈடுப பட்டனர். மீட்புப் பணியில் 10 இற்கும் மேற்பட்ட ஹெலி கொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டன குறிப்பிடத்தக்கது. (இ)

## சிரியாவில் பேருந்து மீது வெடி குண்டுத் தாக்குதல் பத்துப் பேர் பலி!

(பெய்ரூட்)

சிரியாவின் ஹோம்ஸ் மாகாணத்தில் பேருந்தில் வைத்திருந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறியதில் பத்துப் பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிரியா நாட்டில் 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் சிரியாவின் ஹோம்ஸ் மாகாணத்திலுள்ள அக்ராமா மாவட்டத்தில் தீவிரவாதிகள் வெடி குண்டுத் தாக்குதல் நடத்தினர். பேருந்து மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் பேருந்தில் பயணம் செய்த பத்துப் பேர் பலியாகினர். மேலும் 16 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


அல்-பாத் பல்கலைக்கழகத்திற்கு அருகில் குண்டு வெடிப்பு நடைபெற்றுள்ளது. பேருந்தில் பயணம் செய்தவர்களில் அதிகமானோர் மாணவர்கள் எனக் கூறப்படுகிறது.

சிரியாவின் பல இடங்களில் இது போன்ற பல தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

## 65 இலட்சம் டொலருக்கு ஏலம் போன உலகின் மிகப்பெரிய அமைதி வைரம்!

(சியரா லியோன்)

மேற்காபிரிக்கா கண்டத்தில் வைரச் சுரங்கள் நிறைந்த சியரா லியோன் நாட்டின் கோனோ மாகாணத்தின் கிழக்கு பகுதியில் உலகின் மிகப்பெரிய வெட்டப்படாத வைரக்கல்லை கடந்த மார்ச் மாதம் பாதிரியார் ஒருவர் கண்டெடுத்தார். முட்டை வடிவத்திலான அந்த வைரத்தை ஏலத்தில் விட்டு அதன் மூலம் கிடைக்கும் தொகையை நாட்டின் வளர்ச்சி சார்ந்த தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு அரசிடம் அதை ஒப்படைத்தார்.



இதனால் 'அமைதி வைரம்' என பெயரிடப்பட்ட இந்த வைரக்கல்லை அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள பிரபல நிறுவனம் நேற்று முன்தினம் ஏலத்தில் விட்டது. சுமார் 70 பேர் இந்த வைரத்தை பார்வையிட்டு தரத்தை ஆய்வு செய்தாலும், 7 பேர் மட்டுமே ஏலம் கேட்டனர். இதில் பிரிட்டன் நாட்டை சேர்ந்த பிரபல நகை தயாரிப்பாளர் லாரன்ஸ் கிராப் இந்த வைரத்தை 65 இலட்சம் டொலர்களுக்கு வாங்கியுள்ளார். (இ)

## லொஸ் ஏஞ்சல்ஸ் மலையோரப் பகுதியில் காட்டுத்தீ-500 குடும்பங்கள் வெளியேற்றம்

(நியூயோர்க்)

அமெரிக்காவிலுள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தின் மலையோரப் பகுதியில் பற்றி எரியும் காட்டுத்தீயால் கல்லூரி விடுதி மாணவர்கள் மற்றும் 500 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தின் வடக்கே வென்ச்சுரா கவுன்ட்டி மலையோரப் பகுதியை ஒட்டியுள்ள சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்ட வனப்பகுதியில் கட்டுப்படுத்த இயலாத காட்டுத்தீ அங்குள்ள



புதர்களில் பற்றி எரிகிறது. அப்பகுதியில் மணிக்கு சுமார் 115 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் கடும்காற்றால் பிற பகுதிகளிலும் தீ பரவி வருகிறது.

இதையடுத்து, அங்கு மலையோரப் பகுதியில் வசித்து வரும் கல்லூரி விடுதி மாணவர்கள் சுமார் 390 மற்றும் 500 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். (இ)

## லெபனான் பிரதமரின் இராஜினாமா வாபஸ்



(லெபனான்)

லெபனான் பிரதமர் ஸாட் அல் ஹரிரி, தனது இராஜினாமாவை வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போதே, தனது இராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொள்வதாக, அவர் அறிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் லெபனான் பிரதமர் ஹரிரி தங்கியிருந்தபோது, தொலைக்காட்சிச் சேவையொன்றில் திடீரெனத் தோன்றி, தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் இதன் காரணமாக தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இருப்பினும், இவரது இராஜினாமாவை ஏற்க விரும்பாத லெபனான் ஜனாதிபதி மைக்கேல் அவுன், பிரதமர் ஹரிரியை உடனடியாக நாடு திரும்புமாறு வலியுறுத்தியிருந்தார். அப்போது, லெபனானின் சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொள்ளும் நோக்கில் தான் நாடு திரும்புவதாகக் கூறியிருந்த பிரதமர் ஹரிரி, லெபனானுக்குத் திரும்பியிருந்தார். இதனையடுத்து, ஜனாதிபதி அவுனையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடிய வந்த நிலையில், இவரது இராஜினாமா வாபஸ் பெறப்பட்டுள்ளது. (இ)

## ...ப்ரி ...ணம்

...த ஆரம்பம்

...கொரியா அறி ...ரிக்கா மற்றும் ...ர் இணைந்து ...ா. விஜலண்ட் ...த கூட்டுப் பயிற் ...யின் செயற்றிற ...இரா ணுவம் ...ிமில் சுமார் 230 ...ள் என. இந்த ...ட 24 மறைந்து ...ள் எது. இந்த ...ணுவ வீரர்கள் ...ய தீவகற்பத்தில் ...ஏற்படுத்தியது. ...நாவின் அரசி ...ாளர் ஜெப்ரி ...ாக வடகொரி ...க சீனத் தலை ...காலை வந்த ...த சென்றார். ...நா. செய்தி ...ரிவிக்கையில், ...ல்மேன், இரு ...ள் குறித்து அந் ...ரத்தை நடத்து ...ாங் உன்னை ...ம் முடிவாகவி ...டுத் தூதர்கள், ...ம் அவர் சந்தி ...விவித்தார். (இ)


## ஆப்கானிஸ்தானில் நேட்டோ தாக்குதலில் அல்கொய்தா முக்கிய தலைவர் மரணம்!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அல்கொய்தா அமைப்பின் முக்கிய தலைவன் நேட்டோ கூட்டுப்படையினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டான்.

ஆப்கானிஸ்தானில் அல்கொய்தா அமைப்பிற்கு தலைவனாக இருந்தவன் உமர் பின் கதாப் என்ற உமர் மன்சூர். இந்திய துணைக்கண்டத்தில் இரண்டாம் நிலைத் தலைவனாக அல்-கொய்தா அமைப்பால் இவன் அறிவிக்கப்பட்டான்.

ஆப்கானிஸ்தானின் தென்



மேற்கே கஜினி மாகாணத்திலுள்ள ஜிலான் மாவட்ட பகுதியில் இவன் தனது ஆதரவாளர்களுடன் பதுங்கியிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து ஆப்கான் இராணுவ உளவுத்துறையினர், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டுப்படையினர் கூட்டாக வான் தாக்குதல் நடத்தினர்.

பின்னர் அந்த இடத்தை சுற்றிவளைத்து சோதனையிட்டதில் உமன் மன்சூர் மற்றும் அவனுடன் 27 அல்கொய்தா உறுப்பினர்கள் கொல்லப்பட்டதை கண்டறிந்தனர். இதனை தெற்காசிய நாடுகளின் உளவுத்துறை அமைப்பும் உறுதி செய்தது. (இ)

# மகிந்த இல்லாமலேயே சு.க.வெற்றி பெறும்

## மகிந்த சமரசிங்க நம்பிக்கை



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ இல்லாமலேயே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெறும் என்று அந்தக் கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்களில் ஒருவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்க முடியாது என்று கூறும் உரிமை கூட கூட்டு எதிரணிக்குக் கிடையாது.

மகிந்த ராஜபக்ஷ இல்லாமலேயே நாங்கள் நிச்சயம் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவோம்.

முன்னர் இருந்ததை விட இப்போது அதிகமானவர்கள் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தவிர்த்து வெறெந்தக் கட்சியையும் கூட்டு எதிரணி ஆதரிப்பது சட்ட விரோதமானது.

அவர்கள் வேறொரு கட்சியுடன் செல்வது அல்லது அதனுடன் இணைந்து செயற்படுவது, கட்சியின் யாப்புக்கு எதிரானது.

எனவே அவர்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கதவுகள் இன்னமும் திறந்தே உள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அவர்கள் இணைந்து கொள்ள முடியும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக நாடாளுமன்றத்தில் இருந்து கொண்டு, கூட்டு எதிரணியினர் எவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு வாக்களிக்குமாறு கோர முடியும்?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஒரு அரசியல் கட்சியே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி.

நாங்கள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, ஆவணங்கள், ஒளிப்படங்களை ஆவணப்படுத்துகிறோம். எங்கெங்கு, எப்போது, கூட்டு எதிரணியினர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினருக்கு ஆதரவாக பரப்புரை செய்தனர் என்று ஆவணப்படுத்துவோம்.

அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிக்க முயன்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாக நாடாளுமன்றத்திலோ, மாகாண சபைகளிலோ அங்கம் வகிக்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார். (இ-7)

# எந்தவொரு இணையத்தளத்திற்கும் இலங்கையில் தடையில்லை

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு




(கொழும்பு)

இலங்கையில் எந்தவொரு செய்தி இணையத் தளத்துக்கும் தடை விதிக்கப்படவில்லை என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் சில செய்தி இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், எந்தவொரு இணையத்தளத்தையும் தடை செய்வதில் அர்த்தமில்லை.

அவ்வாறு தடை செய்யப்பட்டாலும் கூட பதிலி (proxy) இணையத்தளங்களின் ஊடாக அவற்றை அணுக முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஜிந்தோட்டையில் பாதுகாப்பு உறுதி

## நாடாளுமன்றில் சட்டம் ஒழுங்கு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

காலி, கிந்தோட்டையில் மீண்டும் இனமுறுகல் ஏற்படாதவண்ணம் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து, சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க உரையாற்றினார்.

நாடாளுமன்றம், பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

வாய்மூல விடைக்கான - கேள்வி நேரத்தின் பின்னர், ஜிந்தோட்டை சம்பவம் தொடர்பில், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் கடந்தமாத இறுதியில் முன்வைக்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கவுள்ளதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் பதிலளித்து உரையாற்றுகையில்,

ஜிந்தோட்டையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் பின்னர் 134 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டுள்ளோம்.

அங்கு தற்போது சுமுகமான நிலை இருக்கிறது. அப்பகுதியில் 7 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வகையில் காவலரண் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன், பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளிலும் விசேட அதிரடிப்படையினர் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

அதுமாத்திரமல்லாது மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள், பொலிஸார் மற்றும் இதரதரப்பினரை இணைத்து, தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அங்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அனைத்துத் தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழுவொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

ஜிந்தோட்டை அசம்பாவிதம் இடம்பெற்று உடனடியாக விசேட அதிரடிப் படையினர் அகற்றப்பட்டதாகக் கூறப்பட்டது.

அது தவறான கருத்தாகும். விசேட அதிரடிப்படையினரை நாம் படிப்படியாகவே அங்கிருந்து அகற்றினோம் என விளக்கமளித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பாராட்டை எதிர்பார்த்து ஏமாறுகிறவர்கள்!

பையன் வீட்டிற்குள் கத்திக் கொண்டே உள்ளே நுழைவான். ''அம்மா! அம்மா! இன்னைக்கு செஞ்சுரி போட்டு என் டீமையே ஜெயிக்க வச்சுட்டோம்மா'' என்பான். அம்மா சரி சரி! கையைக் காலைக் கழுவிட்டுப் போய்ப் படி என்பாள். பையன் காற்றிறக்கிய பலூனாய் ஆகிவிடுவான்.

மேடையில் பிரமாதமாகப் பேசிய ஒருவர், நிகழ்ச்சி முடிந்து கீழே இறங்கியதும் தன்னை எல்லாரும் கைகுலுக்கிப் பாராட்டுவார்கள் என்கிற எதிர்பார்புடன் இருப்பார். எவரும் வாயே திறக்கமாட்டார்கள். அவ்வளவுதான்! மனிதர் சோர்ந்துவிடுவார். இப்படி நிறைய உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

மற்றவர்கள் பாராட்டும்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற உணர்வு தான் எண்ணற்ற மனிதர்களைச் சாதனையாளர் பட்டியலிலேயே இன்னமும் விடாமல் இறுக்கிப் பிடித்துக்கொண்டு இருக்கிறது. இந்த உணர்வு ஒரு நல்ல உணர்வு தான்.

அதேநேரத்தில், அது கிடைக்காமல் போனால் நாம் சோர்ந்துவிடக் கூடாது.

மற்றவர்கள் பாராட்டாமல் விட்டு விடு வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இவற்றை நாம் தெரிந்து கொண் டுவிட்டால், பிறர் பாராட்டாமல் இருந்தால் கூட நமக்குச் சோர்வோ, ஆதங்கமோ, கவலையோ, எரிச்சலோ உண்டாகாது.

முதலாவதாக, நம்மைப் பற்றிப் பிறர் கொண்டிருக்கும் எதிர்பார்ப்பு. இவன் செஞ்சுரி அடிப்பது சகஜம் என்றும், இவர் எப்போதுமே பிரமாதமாகத் தான் பேசுவார் இன்று சிறப்பாகப் பேசியதில் வியப்பி ல்லை என்றும் அந்தத் தாயும், அந்தப் பார்வையாளர்களும் எதிர்பார்த்தால் தான் உரியவர்களுக்குப் பாராட்டுக் கிடைக்கவில்லை.

இரண்டாவதாக, அவர்களின் 'அந்த நேரத்து' மனநிலை சிலர், சில நேரங் களில் பிரமாதமாகப் பாராட்டுவார்கள். சில நேரங்களில் தங்களின் சொந்த மனப் பாதிப்பு; சுய கவலை காரணமாக அமை தியாக இருந்து விடுவார்கள். அந்தச் சந்தர்ப்பம் மறுபடி வாய்க்கும் வரை நாம் காத்திருக்க வேண்டியதுதான். மூன்றாது நேருக்கு நேர் சிலர் பாராட்டுவதில்லை. பக்கத்து வீட்டுக்கார அம்மாவிடம், ''இன்று என் மகன் பிரமாதமாக செஞ்சுரி போட்டான் தெரியுமா?'' என்பார் இந்த அம்மா. தன் மனைவியிடம், '' இன்னைக்கு ஒரு பேச்சு கேட்டேன் என்னமாய்ப் பேசினார்!'' என்பார் அந்தப் பார்வையா ளர்களுள் ஒருவர். இத்தகைய பாராட் டுக்கள் நமக்கு உடனடியாகக் கிடைக் காது. ஆனால், பிறர் மூலம் பின்னர் தெரிய வரும். அதுவரை காத்திருக்கத்தான் வேண்டும். இப்படி வரும் பாராட்டிற்கு முகத்திற்கு முகம் பாராட்டுவதைவிட மதிப்பு அதிகம்.

பாராட்டை எதிர்பார்த்து அது கிடைக்காமல் போய் ஏமாறுகிறவர்களுக்கு மேலும் சில வார்த்தைகள்.

பாராட்டுக்குரிய செயலைச் செய்ததுமே நாம் முதலில் சுய மனநிறைவைப் பெற வேண்டும். அதாவது, நாம் இன்று என்னமாய் ஆடினோம். இன்று என்னமாதிரிப் பேசினோம் என்று நம்மை நாமே தட்டிக்கொடுத்துக் கொள்ளவேண்டும்.

பிறருக்கு உதவிவிட்டு, அவரிடமிருந்து பெரிய பாராட்டை எதிர்பார்ப்பதை விட்டு விட்டு இன்றைய பொழுது ஒரு நல்ல பொழுது;நாம் ஒரு நல்ல செயலைச் செய்தோம் என்று இதயத்தில் ஒரு சிறு வெற்றிடத்தைக் கூட மிச்சம் வைக்காமல் மகிழ்ச்சியால் அதை நிரப்பிக் கொள்ளவேண்டும்.

இப்படிச் செய்து கொண்டால், எவர் பாராட்டாவிட்டாலும் நமக்கு எதிர்பார்ப்பே இராது, ஏமாற்றமே ஏற்படாது.

அதுமட்டுமல்ல, பாராட்டுக்குரிய நம் செயலை எவரும் குறை கூறினால்கூட அட சரிதான் போய்யா என்று எடுத்துக்கொள்ளக் கூடிய மனப் பக்குவமும் கூடவே வந்துவிடும்.

**லேனா தமிழ்வாணன்**

# நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல சிறந்த ஒழுக்கம் பேணப்பட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி இடித்துரைப்பு

(கொழும்பு)

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அரசியல்வாதிகள் முதல் சகல துறைகளிலும் சிறந்த ஒழுக்கம் பேணப்படல் வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மின்னேரிய காலாட் படை பயிற்சி நிலையத்தில் தலைமைத்துவ பயிற்சிகளை பெறும் சமுர்த்தி உத்தியோகத்தர்களை சந்தித்தபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பொலநறுவை நகரில் இடம்பெறவுள்ள பல்வேறு வைபவங்களில் பங்குபற்றுவதற்காக நேற்று முன்தினம் பிற்பகல் பொலநறுவைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மின்னேரிய காலாட்படை பயிற்சி நிலையத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்த்துசித்த பனன்வல, மின்னேரிய காலாட்படை பயிற்சி நிலையத்தின் சேனாதிபதி பிரிகேடியர் சுராஜ் பன்ஸஜயா ஆகியோர் இதன் போது ஜனாதிபதியை வரவேற்றனர்.

மின்னேரிய காலாட்படை பயிற்சி நிலையத்தில் தலைமைத்துவ பயிற்சி நெறியினை தொடரும் சமுர்த்தி உத்தியோகத்தர்களை சந்தித்த ஜனாதிபதியுடன் சிநேகபூர்வமாக உரையாடி கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் உரையாடிய ஜனாதிபதி தீவிரவாத இயக்கத்தினை தோல்வியடையச் செய்து தாய் நாட்டுக்கு சுதந்திரத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொடுக்க எமது பாதுகாப்புப் படையினரிடம் காணப்பட்ட சிறந்த ஒழுக்கமே காரணமெனத் தெரிவித்தார்.

எச்சரிக்கைகள், குறிக்கோள், அர்ப்பணிப்பு மற்றும் சவால்களை வெற்றிக்கொள்ளல் தொடர்பான தமது வாழ்வியல் அனுபவங்களை இங்கு நினைவுகூர்ந்த ஜனாதிபதி தவறான பாதையில் பயணிக்கும் சமூகத்தை சரியான திசைக்கு கொண்டு செல்வதற்கு தேவையான பழக்கங்களையும் பயிற்



சிகளையும் ஏற்படுத் திக் கொள்ள வேண்டுமெனவும் சுட்டிக் காட்டினார்.

பொதுமக்களின் இதயத் துடிப்பை இனங்கண்டு அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களையும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக் காட்டினார். (இ-7)

## இலங்கை - சீன உறவு தொடர்பான புகைப்படக்கண்காட்சி திருமலையில்



(கொழும்பு)

இலங்கை மற்றும் சீனாவுக்குமிடையில் இராஜதந்திர உறவு ரீதியாக 60 ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஞாபகார்த்த புகைப்படக் கண்காட்சி நேற்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் கிழக்கு மாகாண ஆளுநர்ரோஹித போகொல்லகமவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை - சீன நட்புறவுச் சங்கம் திருகோணமலை மாவட்ட செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் இலங்கை மற்றும் சீனாவுக்குமிடையில் கடந்த 60 வருடகாலத்தின் போது இராஜதந்திர ரீதியாக நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் புகைப்படங்களாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் பெருமளவான மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் இதனைப் பார்வையிட்டனர். (இ-7)

## கசிப்புடன் கைதான பெண் 13ம் திகதிவரை மறியலில்

(கரணவாய்)

மூன்று போத்தல் கசிப்புடன் வயோதிபப் பெண்ணொருவர் துன்னாலை குடவத்தை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸாரால் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்ட குறித்த பெண் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முற்படுத்திய போது எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)



கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆலயங்கள், சனசமூக நிலையங்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாய், படுக்கை விரிப்பு போன்ற பொருட்கள் வழங்கலும் கரவெட்டி பிரதேச செயலர் க. சிறிமோகனன் தலைமையில் நேற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

## சீன கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இலங்கைக்கு அடுத்த வாரம் பயணம்



(கொழும்பு)

சீன கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளனர். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு இலங்கைக்கும் பயணம் செய்யவுள்ளனர்.

அடுத்த வாரம் இந்தப் பிரதிநிதிகள் இலங்கை பயணம் செய்ய உள்ளதாக இலங்கைக்கான சீனத்தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

சீன சர்வதேச விவகார துணை அமைச்சர் வோங் யாஜுன் உள்ளிட்ட பிரதிநிதிகள் இவ்வாறு இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளனர்.

இந்த சீனப் பயணத்தின் போது பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா நாளை 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் அருணாசலம் அகிலதாஸ், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப் பாளர் நாகலிங்கம் சிவநேசன், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உளவியல் மற்றும் மெய்யியல் துறை விரிவுரையாளர் திருமதி மேனகா சிவகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## அனுருத்தவின் மனு நிராகரிப்பு!

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனிய தாக்கல் செய்த ஆட்சேபனை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சரை அவமதித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கோரியே மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புரவெசி பலய அமைப்பால் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மத்தள விமான நிலையத்தை கையேற்க இந்தியா தீவிரம்

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்தை கையேற்க இலங்கையுடனான பேச்சுவார்த்தைகளை இந்தியா துரிதப்படுத்த எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விமான நிலையத்தை கையேற்பதற்கான முன்மொழிவுகளை இலங்கையிடம் இந்தியா ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 205 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்ய இந்தியா முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஊடாக மத்தள விமான நிலையத்தின் 70 வீத பங்குகளை 40 ஆண்டுகளுக்கு பெற்றுக்கொள்ள இந்தியா ஆர்வம்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இது குறித்த பேச்சுவார்த்தைகளில் இரு தரப்பினரிடையே முழுமையான உடன்பாடு காணப்படாத நிலைமை உள்ளது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பான மேலதிக பேச்சுவார்த்தைகளை இலங்கையுடன்இந்தியா மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா கையேற்க உள்ள நிலையில், விமான நிலையம் குறித்த பேச்சுவார்த்தைகளை இந்தியா துரிதப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## நிறம்மாறியது நீர்வீழ்ச்சி!

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால், இராவணா எல்ல நீர்வீழ்ச்சியில் கொட்டும் நீர் திடீரென சேற்று நிறத்தில் காட்சியளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஊவா மாகாணத்தில் நிலவும் அதிக மழையுடனான காலநிலை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அதில் இருந்து வரும் பாரிய அளவிலான நீர் சேற்று நிறத்தி



லேயே கீழே விழுகிறது. எனினும் தூரத்தில் இருந்து பார்க்கும் போது தங்க நிறத்தில், தங்க நீர் வடிவதனை போன்று காணப்படுகின்றது. (இ-7)

# அரசிடம் தமக்கான சலுகைகளை பெறும் தமிழ் அரசியல்வாதிகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவும் செய்யவில்லை

## டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு

மத்திய அரசில் தங்களுக்கான சலுகைகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டு, சிங்கள அரசு எமது மக்களுக்கு ஒன்றுமே செய்வதில்லை என எமது மக்கள் முன்பாகக் கூறித் திரிகின்ற சுயலாப தமிழ் அரசியல்வாதிகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு வெறும் வாய்ச் சத்தங்களால் போதித்துக் கொண்டிருக்கின்றார்களே அன்றி, இதுவரையில் எதுவுமே செய்ததாக இல்லை என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம், மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி, கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அபிவிருத்தி ஆகிய மூன்று அமைச்சுக்கள் தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தொடர்பில் எடுத்துக் கொண்டால், வடக்கு மாகாணத்தைப் பொறுத்த அளவில் ஆளணிகளின் பற்றாக்குறைகளே மாபெரும் பிரச்சினையாக இருப்பதாகத் தெரிய வருகின்றது.

அந்த வகையில், மின்மானி வாசிப்போர் பற்றாக்குறை பாரியளவில் நிலவுவதாகவே தெரிய வருகின்றது. இதனால், மாதாந்த மின் கட்டணப் பட்டியல்கள் பயனாளிகளுக்குக் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, வேணாவில் ஆகிய பகுதிகளில் மீள் குடியேறிய மக்களுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் வரையில் ஒரு வருட காலமாக மின் கட்டணப் பட்டியல் கிடைக்கப்பட்டிருக்கவில்லை என அம்மக்கள் முறையிட்டிருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலும் சில பகுதிகளுக்கு கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்திலிருந்து, இந்த வருடம் ஒக்டோபர் மாதம் வரையில் மின் கட்டணப் பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

மன்னார் மாவட்டத்தில், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆண்டான்குளம், ஆட்காட்டிக்குளம் உள்ளிட்ட சில கிராமங்களுக்கு மின் வாசிப்பாளர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையே வருவதாக அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலும் இதே நிலையே ஏற்பட்டுள்ளதாக மக்கள் முறையிடுகின்றனர்.

அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் பல பகுதிகளிலும் இத்தகைய நிலைமைகள் பரவலாகக் காணப்படுவதுடன், குறிப்பாக, மீள் குடியேற்ற பகுதிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளிலேயே இந்நிலை மிக அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிய வருகின்றது.

எமது மக்களின் நிலைமைகள் குறித்து இங்கு இருப்பவர்களுக்கு நன்கு தெரியும் என்றே நம்புகின்றேன். அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் நன்கறிவார்.

கடந்தகால யுத்தமானது எமது மக்களை பல்வேறு அழிவுகளுக்கு உட்படுத்தி, பொருளாதார ரீதியில் தலைதூக்க விடாத ஒரு நிலைக்குள் தள்ளிவிட்டுள்ளது. எமது மக்கள் இந்த நிலையிலிருந்து தலைநிமிர்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு தயாரான போதிலும், அதற்கு அவகாசம் வழங்காதவாறு பல்வேறு தடைகள் - புறக்கணிப்புகள் - பாரபட்சங்கள் - முப்பது வருட கால யுத்தம் நடந்து முடிந்தும் காட்டப்படுகின்ற பாகுபாடுகள் - சுரண்டல்கள் - வளங்களின் முடக்கங்கள் - மத்திய அரசிலும் தொடர்கின்றன, மாகாண அரசிலும் தொடர்கின்றன.

மத்திய அரசில் தங்களுக்கான சலுகைகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டு, சிங்கள அரசு எமது மக்களுக்கு ஒன்றுமே செய்வதில்லை என எமது மக்கள் முன்பாகக் கூறித் திரிகின்ற சுயலாப தமிழ் அரசியல்வாதிகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு வெறும் வாய்ச் சத்தங்களால் போதித்துக் கொண்டிருக்கின்றார்களே அன்றி, இதுவரையில் எதுவுமே செய்ததாக இல்லை.

மேலும், இயற்கையும் கூட எமது மக்களைத் தலை நிமிர விடாது, தொடர்ந்தும் பாதித்துக் கொண்டே இருக்கின்றது.

இத்தகையதொரு நிலையில், பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில், இந்த நாட்டில் வறுமைக்கு இன்று முகவரியாக இருக்கின்ற எமது மக்களுக்கு, மாதாந்தம் மின் கட்டணப் பட்டியல் கிடைக்காத நிலையில், இப்படி மாதக் கணக்கில், வருடக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டு, ஒரே தடவையில் அந்தக் கட்டணங்களை அறவிடுகின்றபோது, எமது மக்கள் அதற்கான நிதிக்கு எங்கே போவார்கள்? என்பது குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

ஒரு மாத மின் கட்டணத்தையே செலுத்துவதற்கு பெரும்பாடு படுகின்ற எமது மக்களுக்கு இது ஒரு பாரிய தண்டனையாகவே அமைந்து விட்டுள்ளது என்பதால், இவ்விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதே நேரம், அவ்வாறு மின் கட்டணப் பட்டியல் நீண்ட காலமாகக் கிடைத்திராத மக்களது பாக்கித் தொகைகளை அம் மக்கள் மீளச் செலுத்துவதற்கு அவர்களுக்கு ஒரு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அதாவது, மின் கட்டணம் எத்தனை மாதங்களுக்கு தாமதமாக வழங்கப்பட்டதோ, அத்தனை மாத கால அவகாசத்தில் அந்தப் பாக்கித் தொகையை தவணை அடிப்படையில் மீள அறவிட்டால் மாத்திரமே எமது மக்களால் அதனை ஓரளவு தாங்கிக் கொள்ள முடியும் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரம், இனியும் இத்தகைய நிலை ஏற்படாத வகையில், அந்தந்த மாதங்களுக்கான மின் கட்டணப் பட்டியல்களை பயனாளிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக, உரிய வகையில் அதற்கான ஆளணிகளை நியமிக்குமாறும் மேலும் தற்போது வடக்கு மாகாணத்தில் இலங்கை மின்சார சபையினைப்பொறுத்த மட்டில் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களும்காணப்படுவதாகக் கூறப்படுகின்ற நிலையில், அந்த வெற்றிடங்களை நிரப்புதற்கும் அமைச்சர் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், யாழ் மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற மின்தடை குறித்தும் அமைச்சரது அவதானத்திற்குக் கொண்டு வருகின்றேன். இந்நிலை மேலும் சீர் செய்யப்பட வேண்டியுள்ளது.

எமது நாட்டில் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் உற்பத்திகள் சொற்ப அளவிலேயே காணக்கூடியதான நிலையில், அதற்கான பல்வேறு திட்டங்களை வடக்கு மாகாணத்திலே மேற்கொள்ள முடியுமெனக் கருதுகின்றேன்.

குறிப்பாக, சூரியக்கள, காற்றலை, நீரலை, கிளிசீரியா போன்றவை மூலமான மின் உற்பத்தி முறைமைகளை மேற்கொள்ள முடியும். அதற்கான வளங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இது குறித்தும் அமைச்சர் தனது அவதானத்தைச் செலுத்துவார் என எதிர்பார்க்கின்றேன்.

அதே நேரம், எமது பகுதிகளில் கடந்த காலங்களில் மின் வசதிகள் வழங்கப்பட்டு, அந்த வாய்ப்புகள் தாமதாகியிருந்த எமது மக்களுக்கு அந்த வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கும், பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேராவுக்கும் எமது மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசு கட்டுப்பணம் செலுத்த முன்வராதது ஏன்?

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கேள்வி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குக் கட்டுப்பணம் செலுத்த அரசாங்கத்தின் இரு பிரதான கட்சிகளும் முன்வராமையானது, தேர்தலை மீண்டும் பிற்போட முன்னெடுக்கும் சதி நடவடிக்கையா? என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதென பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாகர காரியவசம் மற்றும் சப்ரகமுவ மாகாண அமைச்சர் கஞ்சன ஜயரத்ன ஆகியோர் பொலநறுவை தேர்தல் காரியாலயத்தில் கட்டுப்பணம் செலுத்தினர். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, சாகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல போராட்டங்களின் பின்னரே தேர்தலை நடத்துவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதென குறிப்பிட்ட சாகர, இம்முறையும் அரசாங்கம் தேர்தலை இழுத்தடிக்க முயலுமாயின் மக்கள் வீதியில் இறங்கி அரசாங்கத்திற்கு எதிராகப் போராடும் நிலை ஏற்படுமென எச்சரித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சப்ரகமுவ மாகாண அமைச்சர் கஞ்சன, ஜனநாயகத்தை கட்டிக்காப்பதாக கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அதனை செயற்படுத்துவதற்கு சிறிதும் முனைப்புக் காட்டாமல் உள்ளதெனத் தெரிவித்தார்.

பிணை முறி உள்ளிட்ட மோசடிகளுக்கு தீர்வு காணாமல், மக்களை பொருளாதார ரீதியில் நெருக்கடிக்கு உள்ளாக்கி நாட்டை சீரழித்துள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்நிலையில், எதிர்வரும் தேர்தல் ஊடாக நல்லாட்சி எனும் அரசாங்கத்திற்கு தகுந்த பாடத்தை புகட்ட மக்கள் எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்துடன் இணைவது தொடர்பாக ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த கஞ்சன, ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவை முறித்துக் கொண்டு வெளியேறினால் மாத்திரமே அதற்கான பேச்சுவார்த்தைக்கே சாத்தியம் என்று குறிப்பிட்டதாகவும், எனினும் அதற்கான எந்த சமிக்ஞையும் சுதந்திரக் கட்சியிடம் காணப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், பொதுஜன பெரமுன தனித்து போட்டியிட்டு மாபெரும் வெற்றி பெற்று அரசாங்கத்திற்கு தக்க பாடத்தை புகட்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தொண்டமான் - மகிந்த தொலைபேசியில் பேச்சு





(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பரபரப்பாக நடந்து வரும் சூழ்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை தொலைபேசியூடாக இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் தேர்தல் கூட்டு என்பன உட்பட பல விடயங்கள் குறித்தும் இதன் போது விவாதிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி மைத்திரி அணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடப்போவதாக ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்ததாகவும், ஆனால், சில இடங்களில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தாமரை மொட்டு அணியுடனும் போட்டியிட விருப்பு கொண்டிருப்பதாக வெளிப்படுத்தினாரென்றும் மகிந்த அணி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இருப்பினும் தொண்டாவை தமது அணியில் இணைத்துக்கொள்ள விருப்பு கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு பசில் ராஜபக்ஷவை கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (இ-7)

# கோத்தபாய கைதாவதைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவு 15ஆம் திகதிவரை நீடிப்பு!

(கொழும்பு)

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதைத் தடுக்கக்கோரி முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தாக்கல் செய்த மனுவிற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷவின் தந்தை டீ. ஏ.ராஜபக்ஷவிற்கு நினைவிடம் அமைப்பதற்கும், நினைவு காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கும் அரச நிதியை பயன்படுத்தியதாக தெரிவித்து குற்றவியல் விசாரணை பிரிவு கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

குறித்த குற்றச்சாட்டை எதிர்த்து கோத்தபாய ராஜபக்ஷவினால் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.


தாக்கல் செய்த மனுவிற்கமைய அவருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரகசிய பொலிஸ் துறையினருக்கு நேற்று வரை மேன்முறையீட்டு நீதிமன்றினால் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு விதிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவை தொடர்ந்து நீடிப்பதா? நிராகரிப்பதா? தொடர்பிலான மீள் விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இம் மீள் விசாரணையின் போதே குறித்த இடைக்காலத் தடையுத்தரவு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கொழும்பு முதல்வர் நானே

## அசாத் சாலி கூறுகிறார்



(கொழும்பு)

மூவின மக்களின் ஆதரவைப் பெற்றவன் என்ற வகையில், முதல்வர் பதவியில் வெற்றிபெற முடியுமென, தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் அசாத் சாலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி மற்றும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் பூரண சம்மதத்துடன், முதல்வர் வேட்பாளராக நான் நிறுத்தப்படுகிறேன்.

"சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் முதற்தடவையாக, ஒரு கட்சியின் செயலாளரான என்னை, கொழும்பு முதல்வர் வேட்பாளராக நிறுத்தியுள்ளமை சிறப்புக்குரியது.

"நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கலப்பு முறையில் இடம்பெறுவதால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவால் விட்டு, முதல்வர் பதவியை என்னால் வெல்ல முடியும்.

"ரோஸி சேனநாயக்கவுக்கு, கிறிஸ்தவர்களின் வாக்குகள் கிடைக்கும். எனினும், எனக்கு மூவின மக்களின் வாக்குகளும் கிடைக்கும். அதனால், கொழும்பு முதல்வர் வேட்பாளராக என்னால் வெல்ல முடியும்" என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

# மொட்டில் இணைந்தார் திஸ்ஸ

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாணசபை உறுப்பினரான சமிந்த ஜானக திஸ்ஸ குட்டியாராய்ச்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து மகிந்த ராஜபக்ஷவுக்கு தனது ஆதரவை வழங்கவுள்ளார்.

பதுளை வில்ஸ்பார்க் மைதானத்தில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கூட்டத்தின் போதே, அவர் அந்தக் கட்சியுடன் இணைந்து கொண்டார்.

திஸ்ஸ குட்டியாராய்ச்சி, ஊவா மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராகச் செயற்பட்டு வரும் நிலையில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்டதுடன், நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, எதிர்வரும் தேர்தலில் தாமரை மலர்மொட்டு சின்னத்தில் போட்டியிடவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "போதையற்ற நாட்டை உருவாக்குவோம்"



(யாழ்ப்பாணம்)

போதையற்ற நாட்டை உருவாக்குவோம் எனும் தொனிப் பொருளிலான தேசிய வேலைத்திட்டத்தின் செயற்பாடுகள் நேற்று யாழ். பொலிஸாரால் குடாநாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வீதிகளில் பயணிக்கும் வாகனங்களில் போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டன. (இ-9)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1271

Search for people, places and things

### கௌசிக்

அவ்வளவு பெரிய போராளியாப்பா அவரு...



ஆமாம் சேர் பேஸ்புக்குல டெய்லி ஐந்து போஸ்டாவது போட்டுடுவாறு...

### சங்கர்

அதிகாலை குளிக்கும் பொழுது குளிராமல் இருக்க இந்த மாதிரி குளிக்கலாம். எப்படி நம்ம



### சியாமளா

சரக்கு அடிச்சிட்டு பொண்டாட்டிய போட்டு அடிச்சா அவன் கிராமத்துக்காரன்



பொண்டாட்டி கிட்ட அடி வாங்கிட்டு போய் சரக்கு அடிச்சா அவன் நகரத்தான்...

### ஆதித்யா

ஊங்க கூட வைச்சு கூட வைச்சு சாப்பிடுங்கன்னு அரசாங்கமே சொல்லுதே!



அது குடிக்கிற தண்ணியைத் தாம்மா நீ வைக்கிற குழம்பை இல்ல...!

### சஞ்சீவ்

பொறாமையில இருந்து மின்சாரம் தயாரிக்கிற டெக்னிக்கை கண்டுபிடிச்சா...



நம்ம நாட்டுல இருந்து உலகத்துக்கே மின்சாரம் சப்ளை பண்ணலாம்

### சௌமியன்

எல்லாத்தையும் மறந்துட்டு திட்டு வாங்கிறது ஆண்



எல்லாத்தையும் ஞாபகம் வச்சுகிட்டு திட்டுறது பெண்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்

### திருகோணமலை மாவட்ட தேர்தல் தொகுதி

திருகோணமலை மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு 379541 பேர் இருந்துள்ளனர். யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்ந்து கொண்டிருந்தாலும் இன்னும் மீள்குடியேற்றம் முற்றுப் பெறவில்லை. இடம்பெயர்ந்த தமிழ் மக்களில் இன்னும் ஒரு பிரிவினர் இந்தியாவில் அகதி முகாம்களில் வாழ்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2012இல் திருகோணமலை மாவட்ட குடித்தொகையின் இனப்பரம்பலை நோக்குமிடத்து சிங்களவர் 26.74% மாகவும், தமிழர் 31.05%மாகவும், முஸ்லிம்கள் 41.83% மாகவும் ஏனையோர் 0.36% மாகவும் இருந்தனர். சமய ரீதியில் பௌத்தர்கள் 26.7 வீதமாகவும் இந்துக்கள் 25.94% மாகவும் முஸ்லிம்கள் 42.0% மாகவும் கத்தோலிக்கர்கள் 3.82% மாகவும் கிறிஸ்தவர்கள் 2.05% மாகவும் ஏனையோர் 0.2% மாகவும் இருந்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து மாகாணசபைத் தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளன. இம்மாவட்டத்தில் ஒரு தேர்தல் தொகுதியின் சராசரி மக்கள் தொகை 37951÷5=75708 ஆகவும் சராசரியில் இருந்து +10வீதம் 83276 ஆகவும் சராசரியில் இருந்து -10வீதம் 68137 ஆகவும் இருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் பின்வரும் தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் செய்யலாம்.

1. மூதூர்
2. கிண்ணியா
3. சேருவில
4. திருகோணமலை
5. கட்டுக்குளம்

### மூதூர் தேர்தல்தொகுதி

மூதூர் பாராளுமன்றத் தேர்தல் தொகுதி 1947 இல் இருந்து 1989 வரையிருந்தது. இதனால் மூதூர் பெயரில் மாகாணசபை தேர்தல் தொகுதி இருப்பதை மக்கள் விரும்புவர்.

இத் தொகுதிகள் உள்ளடங்கும் பரப்புகளும் மக்கள் தொகையும் பின்வருமாறு,


1. மூதூர் பிரதேச செயலகப் பிரிவு-56621

2. ஈச்சிலம்பற்றை பிரதேச செயலகப்பிரிவு-11409

3. சேருவில பிரதேச செயலகப் பிரிவுகளில் வரும் பின்வரும் கிராம அதிகாரி பிரிவுகள்,

217 D அரியமான்கேணி 512
217 F சிவபுரம் 243
217 E இலிங்கநகர் 489

(இவைகள் கட்டுரை ஆசிரியரின் தனிப்பட்ட முன்மொழிவுகள்)




215 தங்கநகர் 954
மொத்தம் 70228

சேருவிலப் பிரிவில் மேற்குறிப்பிட்ட கிராம அதிகாரி பிரிவுகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் யுத்தத்தால் இடம்பெயர்ந்து இருந்ததால் 2012 ஆம் ஆண்டு குடித்தொகை கணக்கில் குறைவாக இருக்கின்றார்கள். தற்பொழுது மீளக் குடியேறியுள்ளதால் இக்கிராம அதிகாரி பிரிவுகளில் மக்கள் தொகை பழைய நிலையை எட்டியுள்ளது.

இத்தேர்தல் தொகுதியில் முஸ்லிம்கள் 49.98%மாகவும் தமிழர்கள் 49.10%மாகவும் இருக்கின்றனர்.

இந்த தொகுதியில் முஸ்லிம், தமிழ் ஆகிய இரு சமூகமும் வெற்றி பெறக் கூடிய மக்கள் தொகை இருப் பினும் தேர்தலில் வாக்களிக்கும் முறையிலேயே யார் வெல்வர் என்பது தீர்மானிக்கப்படும்.

### சேருவில தேர்தல் தொகுதி

இத்தொகுதிக்குள் அடங்கும் பரப்பும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| சேருவில பிரதேச செயலகப் பிரிவு பின்வரும் கிராம அதிகாரி பிரிவுகள் நீங்கலாக -217 D அரியமான்கேணி 217 E லிங்கபுரம், 217 F சிவபுரம் 215, தங்கநகர் | 11434 |
| கந்தளாய் பிரதேச செயலகப்பிரிவு | 40302 |
| தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுள் அடங்கும் | |
| 228L கல்மட்டியா வடக்கு கி.அ.பி | 2107 |
| 228C கல்மட்டியா தெற்கு கி.அ.பி | 2667 |
| மொறவெவ பிரதேச செயலகப் பிரிவுகள் அடங்கும் | |
| 230 பனிக்கட்டியாவ கி.அ.பி | 1990 |
| 230 A மகாதிவுள் வெவா கி.அ.பி | 1846 |
| 230 B மகாதிவுள் வெவா கி.அ.பி | 905 |
| கோமரன்கடவல பிரதேச செயலகப் பிரிவு | 7382 |
| | 75136 |

இத்தேர்தல் தொகுதியில் அண்ணளவாக 90% சிங்களவராகவும் 10% முஸ்லிம்களும், தமிழர்களும் இருந்துள்ளனர்.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

### கிண்ணியா தேர்தல் தொகுதி

கிண்ணியா தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பரப்பும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவு 64613

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுள் அடங்கும் கிராம அதிகாரி பிரிவுகள்

228 G முள்ளிப்பொத்தானை வடக்கு 3858
228 B முள்ளிப்பொத்தானை 5544
228 F முள்ளிப்பொத்தானை கிழக்கு 1393
228 E சிறாச் நகர் 4744

கிண்ணியா தேர்தல் தொகுதியில் மக்கள் தொகை 80152. இத்தொகுதியில் முஸ்லிம் மக்கள் 91.93 வீதமாகவும் சிங்களவர் 4.25 வீதமாகவும் தமிழர் 3.81 வீதமாகவும் இருந்தனர்.

### திருகோணமலை நகர் தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதி திருகோணமலை நகர் பகுதிகளையும் அயற்பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. இத்தொகுதி திருகோணமலை நகரும் அயற்பகுதி பிரதேச செயலகப் பிரிவின் கூடிய பகுதியைக் கொண்டுள்ளது. இத்தேர்தல் தொகுதியின் பரப்பும் மக்க்ள் தொகையும் பின்வருமாறு,

திருகோணமலை நகரும் அயற்பகுதி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் கிராம அதிகாரி பிரிவுகள்.

இத்தேர்தல் தொகுதியின் மொத்த குடிசனத் தொகை 75412 ஆக இருந்தது. இத் தேர்தல் தொகுதியில் தமிழர்கள் 63 வீதமாகவும் சிங்களவர் 22 வீதமாகவும் முஸ்லிம்கள் 14 வீதமாகவும் ஏனையோர் ஒரு வீதமாகவும் இருந்துள்ளனர். இத் தொகுதி நகராக்கப்பட்ட மக்களைக் கொண்டதாகும். (தொடரும்)

# மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்கு ஜனாதிபதியும் பொறுப்புக்கூற வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி மைத்திரியும் பொறுப்புக்கூற வேண்டுமென கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



பொலநறுவையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார். குறித்த சந்திப்பில் அவர் தொடர்ந்து மேலும் உரையாற்றுகையில்,

அரசாங்கம் இன்று பாரிய வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளது. அதனால் இலஞ்சம் கொடுத்து வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அரசாங்கத்திற்கு ஒரு வகையிலும், எதிரணியினருக்கு ஒரு வகையிலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கடந்த மூன்று வருடகாலமாக மகிந்த ராஜபக்ஷவை ஏசியே ஆட்சிநடத்தினர். அதுமட்டுமல்ல, ஜனாதிபதியை பிரதமரும், பிரதமரை ஜனாதிபதியும் திட்டுவதோடு, அமைச்சரவையிலும் ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்கின்றனர். ஆனால், உருப்படியான வேலைத்திட்டம் ஒன்றும் இல்லை.

ஜனாதிபதிக்கு நாம் சேறு பூச வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கத்தில் உள்ளவர்கள், அவர்களே அவர்களுக்கு சேறுபூசிக் கொள்கின்றனர்.

சகல தவறுகளுக்கும் பிரதமர் மட்டும் காரணம் அல்லர். மத்திய வங்கியின் ஆளுநரை நியமிக்கும் கடிதத்தில் இறுதியில் ஜனாதிபதியே கையெழுத்திட்டுள்ளார். ஆகையால் பிணை முறி மோசடிக்கு ஜனாதிபதியும் பொறுப்புக்கூற வேண்டும்.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு கொடுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான மகிந்த சமரசிங்க மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர் ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இதற்கு பொறுப் புக்கூற வேண்டும்.

மைத்திரியை ஜனாதிபதியாக்குவதற்கு ஆதரவு வழங்கிய மக்கள் விடுதலை முன்னணியும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். இப் போது அரசாங்கத்தின் பிழைகள் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியினர் சற்று தேடுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, அரசாங்கத்தின் ஒரு அங்கம். அதனால் அக்கட்சியை பற்றி கதைப்பதற்கு ஒன்றும் இல்லை. மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டு அமைச்சரவைக்கு சென்றால் நல்லது" என அவர் மேலும் விமர்சித்தார். (இ-7)

## உதயங்க வீரதுங்கவின் மனு 29 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துநரும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்கவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து கொண்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2005 - 2006ம் ஆண்டு காலப்பகுதியில் மிக் ரக விமானக் கொள்வனவின் போது நிதிமோசடி செய்தார் என்று உதயங்கவுக்கு எதிராகக் குற்றம்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில், சர்வதேச பொலிஸார் ஊடாகக் கைதுசெய்யுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் கடந்த வருடம் ஒக்டோபர் 20ஆம் திகதியன்று பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை இரத்துச்செய்யுமாறும் அதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் கோரியே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனு, உயர் நீதிமன்ற நீதியரசர்களான சிசிர டி அப், நளின் பெரேரா, பிரியந்த ஜயவர்தன ஆகிய மூவர் அடங்கிய குழு முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்கண்ட திகதி அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை உதயங்க வீரதுங்க ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மீன்பிடித்துறையை முன்னேற்ற மேற்குலக நாடுகளின் திட்டங்களை பின்பற்ற வேண்டும்



## வியாழேந்திரன் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

மீன்பிடித்துறையை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல உரிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்குலக நாடுகளின் திட்டங்களையும் நாங்கள் பின்பற்ற வேண்டும்.

இதன்மூலம் நாங்கள் பாரிய வருமானத்தைப்பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் வே.பரமேஸ்வரன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம், சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் இ.ஜோஇன்பராஜ் ஆகியோர் கலந்துகொள்வர் (இ-10-19)

# பேருந்து, லொறிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரம் இரத்து

## அமைச்சர் அர்ஜுன கடும் உத்தரவு



(கொழும்பு)

பேருந்து வண்டிகள் மற்றும் லொறிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிப்பதை உடனடியாக நிறுத்துமாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தலை மீறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என்று அமைச்சர் அறிவித்துள்ளார்.

தரக்குறைவான எரிபொருளை நாட்டிற்கு கொண்டுவருவதை இன்னமும் நிறுத்த முடியாதுள்ளதாகவும் அமைச்சர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தின் போது தெரிவித்தார்.

மின்சக்தி, எரிசக்தி, பெற்றோலிய வள அபிவிருத்தி, கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டது. இந்த விவாதத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் அர்ஜுன ரணதுங்க,

15 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை களஞ்சியப்படுத்தக்கூடிய தாங்கியொன்றை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் 6 எண்ணெய்த் தாங்கிகள் கொலன்னாவையில் நிர்மாணிக்கப்படும். விமானங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக அதிவேக நெடுஞ்சாலைக்கு அண்மித்ததாக கட்டுநாயக்க வரை புதிய குழாய் கட்டமைப்பொன்று நிர்மாணிக்கப்படும்.


அதேவேளை விமான நிலைய எரிபொருள் விநியோக கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்படும். எரிபொருள் நிரப்பு நிலையங்களை பரிசோதிக்கும் நடைமுறையொன்றும் ஏற்படுத்தப்படுமென்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆய்வுக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் யாழ். சமூகம் எதிர்கொள்ளும் பாலியல் இம்சைகள் எனும் தலைப்பில் ஆய்வுக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெறும்.(இ-10-106)

## கஜமுத்துக்களுடன் மூவர் கைது



(கொழும்பு)

கல்கமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பளுகந்தேவ பிரதேசத்திலிருந்து கஜமுத்துக்களுடன் 3 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வலான குற்ற ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமையவே நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடம் இருந்து 10 கஜமுத்துக்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் கல்கமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## பொறுமைக்கு கிடைத்த பரிசு

நெல்லூரில் தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர்.

"ஐயா! பெரியவர்களாகிய நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமியர்கள் என்ன செய்வர்? இந்த நிலையில் நீங்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும்" என்று வேண்டினர்.

இளகிய உள்ளம் படைத்திருந்த அவர் "இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டாம். ஆளுக்கொரு மோதகம் கிடைக்குமாறு செய்கிறேன். என் வீட்டிற்கு வந்து மோதகத்தை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்!" என்றார்.

மாளிகை திரும்பிய அவர், தன் வேலைக்காரனை அழைத்தார். "இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொள். ஆளுக்கொரு மோதகம் கிடைக்க வேண்டும். கூடவும் கூடாது, குறையவும் கூடாது. நாளையிலிருந்து மோதகங்களைக் கூடையில் சரியான எண்ணிக்கையில்



வைத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே இரு" என்றார்.

மறுநாள், வேலைக்காரன் மோதகக் கூடையுடன் வெளியே வந்தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன்.

பெரிய மோதகத்தை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லோரும் எடுத்துச் சென்றது போக, மிஞ்சி இருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.

இப்படியே தொடர்ந்து நான்கு நாட்கள் நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல்வந்தர். ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அந்தச் சிறுமி. தன் வீட்டிற்கு வந்தவள், தன் தாயிடம் அதைத் தந்தாள். அந்த மோதகத்தைப் பிய்த்தாள் தாய். அதற்குள் இருந்து ஒரு தங்கக்காசு கீழே விழுந்தது.

அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு செல்வந்தரின் வீட்டிற்கு வந்தாள் சிறுமி. "ஐயா! இது உங்கள் தங்கக் காசு. மோதகத்திற்குள் இருந்தது. பெற்றுக் கொள்ளுங்கள்!" என்றாள். அவள். "மகளே! உன் பெயர் என்ன என்று கேட்டார் செல்வந்தர். சிறுமி தன் பெயர் கிரிசாம்பாள் எனக் கூறினாள். மகளே உன் பொறுமைக்கும், நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல் என்றார் செல்வர். துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததை தன் தாயிடம் சொன்னாள். எனவே, நாமும் பொறுமையாகவும், நேர்மையாகவும் இருந்தால் பெரியோர் பாராட்டைப் பெறலாம்.

## 12.2017 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1060- முதலாம் பேலா அங்கேரியின் மன்னனாக முடிசூடினான்.
- 1240- உக்ரைனின் கீவ் நகரம் மங்கோலியரிடம் வீழ்ந்தது.
- 1704- முகாலய-சீக்கியப் போரில், சீக்கிய கால்சாக்கல் முகாலய இராணுவத்தினரைத் தோற்கடித்தனர்.
- 1768- பிரித்தானிக்கா கலைக்களஞ்சியத்தின் முதற் பதிப்பு வெளியிடப்பட்டது.
- 1790- ஐக்கிய அமெரிக்க சட்டமன்றம் நியூயோர்க் நகரில் இருந்து பிலடெல்பியாவுக்கு இடம் பெயர்ந்தது.
- 1865- ஐக்கிய அமெரிக்காவில் அடிமை முறை தடை செய்யப்பட்டது.
- 1877-வாசிங்டன் போஸ்ட் செய்திப்பத்திரிகை வெளியீடு ஆரம்பமானது.
- 1897- வாடகை வாகனங்கள் உலகில் முதற்தடவையாக லண்டனில் சேவைக்கு விடப்பட்டன.
- 1916- முதலாம் உலகப் போர்: மைய சக்தி நாடுகள் புக்கரெஸ்ட் நகரைக் கைப்பற்றின.
- 1917- பின்லாந்து ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1917- கனடாவின் நோவா ஸ்கோசியாவில் ஆலிபாக்சு துறைமுகத்தில் ஆயுதக் களஞ்சியக் கப்பல் ஒன்று வெடித்ததில் 1,900 பேர் உயிரிழந்தனர். நகரத்தின் பெரும் பகுதி அழிந்தது.
- 1921- இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் இடையில் நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.
- 1922- ஐரிய சுதந்திர நாடு உருவானது.
- 1941- இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியமும் கனடாவும் பின்லாந்து மீது போரை அறிவித்தன.
- 1957- வங்கார்ட் விண்கலம் ஏவப்படுகையில் வெடித்துச் சிதறியது.
- 1971- இந்தியா வங்களாதேஷத்தை அங்கீகரித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்தியாவுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் துண்டித்தது.
- 1977- தென்னாபிரிக்கா "பொப்புதட்சுவானா"வுக்கு விடுதலை அளித்தாலும் எந்த நாடும் அதனை அங்கீகரிக்கவில்லை.
- 1997- சைபீரியாவில் ரஷ்ய சரக்கு விமானம் ஒன்று குடிமனைத் தொடர் ஒன்றில் மோதியதில் 67 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005-சீனாவின் டொங்கூ என்ற இடத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பல கிராம மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
- 2006- செவ்வாய்க் கோளில் இருந்து மார்ஸ் குளோபல் சேர்வயர் அனுப்பிய படங்களில் இருந்து அங்கு நீர் திரவ நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தியதாக நாசா அறிவித்தது.

### பிறப்புகள்

- 1732- வாரன் ஹேஸ்டிங்ஸ், பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனியின் வங்காளத்தின் முதல் தலைமை ஆளுநர் (இ. 1818)
- 1823- மாக்ஸ் முல்லர், செருமானிய-ஆங்கிலேய மொழியியலாளர் (இ. 1900)
- 1863- சார்லஸ் மார்ட்டின் ஹால், அமெரிக்க வேதியியலாளர், பொறியியலாளர் (இ. 1914)

### இறப்புகள்

- 343- நிக்கலசு, கிரேக்க ஆயர், புனிதர் (பி. 270)
- 1783- நிக்கோல்-ரெயின் லெப்பாட், பிரான்சிய வானியலாளர், கணிதவியலாளர் (பி. 1723)
- 1868- ஒகஸ்ட் சிலெய்ச்சர், செருமானிய மொழியியலாளர் (பி. 1821)
- 1889- ஜெபர்சன் டேவிஸ், அமெரிக்க அரசியல்வாதி, அமெரிக்கக் கூட்டமைப்பின் தலைவர் (பி. 1808)
- 1892- வெர்னர் வொன் சீமன்சு, செருமானியப் பொறியியலாலர் (பி. 1816)
- 1961- பிரென்சு ஃபனோன், பிரான்சிய மருத்துவர் (பி. 1925)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 110 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 55 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 320 | 600 | 300 |
| தக்காளி | 100 | 100 | 80 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 30 | 40 | 60 |
| கோவா | 100 | 150 | 80 | 160 | 120 |
| கரட் | 180 | 300 | 200 | 240 | 200 |
| பூசணி | 60 | 100 | 40 | 100 | 60 |
| புடோல் | 120 | 100 | 60 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 120 | 60 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 320 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 110 | 160 | 180 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 100 | 60 |
| பயற்றங்காய் | 180 | 200 | 120 | 200 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 240 | 240 | 200 |
| பீற்றூட் | 120 | 200 | 150 | 200 | 140 |
| கறிமிளகாய் | 450 | 400 | 320 | 320 | 250 |
| முருங்கைக்காய் | 350 | — | 160 | 320 | 400 |
| போஞ்சி | 180 | 250 | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ளை | 80 | 100 | 90 | 100 | 140 |
| கீரை - 1பிடி | 80 | 50 | 40 | 40 | 50 |
| தேசிக்காய் | 60 | 40 | 50 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 75 | 60-100 | 100 |
| இராசவள்ளி | — | — | 360 | 300 | — |
| வெங்காயப்பூ | 350 | — | 300 | 240 | 250 |
| முள்ளங்கி | 80 | — | 60 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 80 | — | 40 | 40 | 40 |
| வல்லாரை | 30 | — | 15 | 25 | 40 |
| ஈரப்பலா | 80 | — | 70 | 120 | 80 |

நாம் அறிந்துள்ளவைகளுக்கு அப்பால் ஒரு அறிவும் சக்தி நம்முள் உள்ளது. நமது சிந்தனைகளை விட நாம் உயர்ந்தவர்கள். ~ ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எல்லாவற்றிலும் ஒத்து ஓடினாலும் ஆசனப் பகிர்வில் ஓட முடியவில்லை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு ஆசனப் பங்கீடு தொடர்பான கூட்டம் நடந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தமக்கு உரிய ஆசனங்களைத் தர மறுப்பதாக கூட்டமைப்புக்குள் இருக்கும் ரெலோ, புளொட் ஆகியன குற்றம் சாட்டியுள்ளன.

இதனால் அவை கூட்டமைப்பை விட்டுப் பிரிந்து சென்று தனியாகவோ அன்று வேறு கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்தோ உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் பேசப்படுகிறது.

இந்தப் பேச்சுக்கள் எல்லாம் வெறும் பொழுது போக்குக்கானதாகவே அன்றி அரசியல் ஆய்வு எனும் சீவியத்திற்காகவோ நடப்பதாகவும் இருக்கலாம்.

எது எவ்வாறாயினும் நாம் தமிழ் மக்களின் பக்கமாக நின்று அரசியல் குழப்பங்களைப் பார்ப்பதே ஏற்புடையதாகும்.

அவ்வாறானதொரு பார்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ் மக்களின் நலனில் கொண்டுள்ள அக்கறையை விட, கட்சி அரசியல் இலாபம் என்பதிலேயே அதீத கருசனை கொண்டுள்ளதென்பது புலனாகிறது.

அதாவது தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டபோது ரெலோ அமைப்பு பேரவையில் சேர்ந்து விடக்கூடாது என்பதற்காக ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவி வழங்கப்பட்டது.

பேரவையில் சேராமல் தடுப்பதற்காக தமிழரசுக் கட்சி வழங்கிய பதவியைப் பெற்றுக் கொண்ட செல்வம் அடைக்கலநாதன் அந்தப் பதவியைக் காப்பாற்றுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விசுவாசமாகச் செயற்பட்டார்.

ஆனால் இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஆசனப்பங்கீடு நடக்கும்போது, ரெலோவுக்கு ஓரளவுக்கேனும் ஆசனம் வழங்க தமிழரசுக் கட்சி மறுக்கிறது.

அதேநேரம் தரப்பட்ட ஆசனம் போதாது என்று ரெலோ தரப்பு முறுகுகிறது.

ஆசனப்பிரிப்பின்போது குழப்பமடைகின்ற இவர்கள் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையில் கூட்டமைப்பின் தலைமை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதிலோ அன்றி சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என கூட்டமைப்பின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியதை எதிர்த்தோ குழப்பமடைந்திருந்தால்,

அட, எங்கள் மீது கருசனை தாராளமாக் இருக்கிறது என்று தமிழ் மக்கள் நெஞ்சு நிமிர்த்திக் கூறியிருப்பார்கள்.

ஆனால்தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களின் போதெல்லாம் அமைதியாக இருந்தவர்கள், தேர்தல் ஆசனப்பங்கீட்டில் குழப்பமடைகின்றனர் என்றால், அதன் பொருள் என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்வர்.

எதுஎவ்வாறாயினும் கூட்டமைப்பை தனித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியாக ஆக்குவதற்கான முயற்சிகள் நடக்கிறது. அதன் ஒத்திகையே இப்போது நடந்து கொண்டிருக்கிறது அவ்வளவுதான்.

# மயிலிட்டி துறையை விரைந்து சீரமைக்க அமைச்சரவை ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

அரச படைகளால் அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி துறைமுகத்தை விரைவாகச் சீரமைத்து கடற்றொழிலாளர்களின் பாவனைக்கு வழங்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கிலுள்ள மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் 1980ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டின் கடல் தொழில் துறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய முக்கிய துறைமுகங்களில் ஒன்றாகும்.

அது மாத்திரமன்றி தென கிழக்கு பருவபெயர்ச்சி காலப பகுதியிலும் பயன்படுத்தக் கூடியது இதன் சிறப்பாகும்.

மோதல்கள் நிலவிய காலப்பகுதியில் இதன் செயற்பாடுகள் முடங்கியிருந்தன. வடக்கில் அமைதி நிலை மீண்டும் திரும்பியதை யடுத்து கடந்த யூலை மாதத்தில் இந்த துறைமுகமும மற்றும் அதனை அண்டிய பகுதியில் 54 ஏக்கர் காணியையும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அரச படைகள் விடுவித்தன.

இதற்கமைவாக அந்த பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடிய மர்ந்தனர்.

இதனால் மயிலிட்டித் துறைமுகத்தை மீள பயன் படுத்துவதற்கு ஏதுவான வகையில் சீரமைப்புச் செய்வதற்கான வேலைத் திட்டங்களை துரித கதியில் ஆரம்பிப்பதற்கு அவசியமான செயற்றிட்டங்களை மேற் கொள்ளவேண்டும் என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள தொடர்பான அமைசசர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்குப் பத்திரம் முன்வைத்தார். இந்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. (ம)

## கந்தப்பசேகரம் வீதி காப்பெற் வீதியாக்கும் வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

கந்தப்பசேகரம் வீதி காப்பெற் வீதியாக்கும் வேலைத் திட்டமானது துரித கதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஆஸ்பத்திரி வீதியில் பாரவூர்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்றி இறக்கல் வலயம் தொடர்பாக மாநகர சபையினால் ஏற்படுத்தப்பட்ட நேரம் தொடர்பான விதிமுறைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் கந்தப்ப சேகரம் வீதியூடான போக்கு வரத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது.

கந்தப்பசேகரம் வீதி காப்பெற் வீதியாக்கும் வேலைத் திட்டமானது நிறைவுறுத்தப்படும் வரை இவ் அறிவித்தல் நடைமுறையில் இருக்கும என யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ)

# எச்சரிக்கையினை மீறி கடலுக்கு சென்ற 25 மீனவர்கள் கைது

(மன்னார்)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள அதிக காற்றுடனான காலநிலையினால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என காலநிலை அவதான நிலையத்தினால் எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் எச்சரிக்கையை மீறி கடலுக்கு மீன்பிடி நடவடிக்கைகளுக்காகச் சென்ற 25 மீனவர்கள் மன்னாரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த 25 மீனவர்களும் மன்னார் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் முன்னிலைப் படுத்தப் பட்டுள்ளனர்.

இதன்போது எச்சரிக்கையினையும் மீறி கடலுக்குச் சென்ற குறித்த மீனவர்கள் மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜே.அலெக்ஸினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.(ம)

## முன்னாள் போராளி திடீர் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் திடீர் என உயிரிழந்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவில் பொறுப்பாக இருந்து புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியான பிறையாளன் என்று அழைக்கப்படும் மாமடு சேனைப்பிலவு,நெடுங்கேணியினை சேர்ந்த 42 அகவையுடைய இரத்தினசிங்கம் ஆனந்தராசா என்பவர் கடந்த 6 நாட்களாக மாஞ்சோலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

05.12.2017 அன்று இரவு திடீரென வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக இவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறையாளனின் உடலம் நேற்று 06.12.2017 பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. (ம-281)

# கலட்டி மெ.மி.த.க பாடசாலை பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டி மெ.மி.த.க.பாடசாலையின் 2017ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபரின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வட மாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தின் பணிப்பாளர் குலிக்னா ரூபன் பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தின் இணைப்பாளர் திருமதி ந.ஸ்ரீதேவி சிறப்பு விருந்தினராகவும்,

வடக்கு மாகாண உள சமூக வள நிலையத்தின் உதவி முகாமையாளர் செல்வி சி.உதயகலா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி துஷ்யந்தினி விக்னரூபன் வழங்கி வைப்பார். (ம)

# தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியது ஈ.பி.டி.பி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர சபை தவிர்ந்த யாழ். மாவட்ட ஏனைய 16 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி நேற்று செலுத் தியது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) மேலதிக நிர்வாகச் செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்) உள்ளிட்டோர் அடங்கிய கட்சியின் உறுப்பினர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப் பணத்தை செலுத்தினர்.

கடந்தமாதம் 28ஆம் திகதி சாவகச்சேரி நகர சபைக்கான கட்டுப்பணத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## சத்திய தரிசனம்

### எச்சரிக்கையாகப் பழகுங்கள்

❖ நம்பிக்கையிருந்தால் அன்பிருக்கும், அன்பிருந்தால் அமைதியிருக்கும், அமைதியிருந்தால் உண்மையிருக்கும், உண்மையிருந்தால் உள மகிழ்ச்சியிருக்கும், உள மகிழ்ச்சியிருந்தால் கடவுள் இருப்பார்.

❖ தாயிடம் அன்பு காட்டுவதுடன், தாய், தந்தை, குரு, விருந்தினரை கடவுளாக மதிக்க வேண்டும். இந்த நால்வருள் தாய் முதன்மையானவள்.

❖ அன்பை வளர்த்துக்கொள் அன்பைப் பரப்பு அன்பை அறுவடை செய்து கொள், அன்பை விட மேலான மதம் ஏதுமில்லை.

❖ தீய செயல்கள் நன்மை பயக்காது, நல்ல செயல்கள் தீமை விளைவிக்காது, வேப்ப விதையில் மாவிளையாது. மாங்கொட்டையில் வேம்பு விளையாது.

❖ பேசும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மிருகங்களுக்கு கொம்புகள், பூச்சிகளுக்கு கொடுக்குகள், விலங்குகளுக்கு நகங்கள், நச்சுப்பறகள் உள்ளன. மனிதனுக்குத் தாக்கும் ஆயுதம் நாக்கு. நாக்கினால் ஏற்பட்ட காயம் ஆற நீண்ட நாள் ஆகும்.

❖ நல்லது செய்தவனுக்கு நல்லது செய்வதில்லை மனிதனுக்கு பெருமை இல்லை. தீமை செய்தவனுக்கும் கூட நன்மை செய்வதில் தான் பெருமை உள்ளது.

JSAC

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு (கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

16 2017

பெண்கள் வெறும் பாலியல் பொருளல்ல. தாரணி எங்கும் தடம் பதிக்கும் மனித வர்க்கம் அவள் என இன்றைய இளைஞர்களின் சிந்தனையில் மாற்றத்தை விதைத்திடுவோம

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### தாய் கர்ப்பிணியாக இருக்கும் பொழுது குழந்தைக்கு மொட்டை போடலாமா?

தாய் கர்ப்பிணியாக இருக்கும் பொழுது குழந்தைக்கு மொட்டை போடுதல் கூடாது. இரு குழந்தைகளுக்கும் சேர்த்து மொட்டை போடலாம். ஒரே நாளில் இரு திதிகள் வந்தாலும் இரு நட்சத்திரங்கள் வந்தாலும் அந்த நாளில் குடி கழித்தல் கூடாது. (தொடரும்)

# இந்தியாவுடனான ஒரு நாள் போட்டி புதிய உத்வேகத்துடன் இலங்கையணி

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான இலங்கை அணி இரும்பு மனிதன் திசார பெரேரா தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக பாகிஸ்தானுடன் விளையாடிய அணியிலிருந்து சந்திமல், குஷால் மெண்டிஸ், கப்பு கெதர, சீக்குகே பிரசன்னா, மிலிந்த சிறிவர்தன ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். லசித் மலிங்காவுக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

உபாதையடைந்திருந்த அசேல குணரத்ன மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். வண்டெர்சி, அகில தனஞ்சய ஆகிய பிரதான சுழற்பந்து வீச்சாளர்களுடன் சுழற்பந்து வீசும் சகலதுறை வீரர்களான சதுரங்க டி சில்வா மற்றும் சசித பத்திரன ஆகியோர் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

எதிர்வரும் 10,13,17 ஆகிய திகதிகளில் தர்மசாலா, மொஹாலி, விசாகப்பட்டணம் ஆகிய நகரங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

முதலிரு போட்டிகளும் முற்பகல் 10.30 இற்கும் இறுதிப்போட்டி பிற்பகல் 1.30 இற்கும் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒரு நாள் அணி விபரம்

திசார பெரேரா (அணித் தலைவர்), உபுல் தரங்க, தனுஷ்க குணதிலக, நிரோஷன் டிக்வெல்ல, சதிர சமரவிக்கிரம, லஹிரு திரிமன, அஞ்சலோ மத்தியூஸ், அசேல குணரத்ன, சதுரங்க டி சில்வா, சச்சித் பத்திரன, அகில தனஞ்சய, ஜெப்ரி வண்டெர்சி, துஷ்மந்த சமீர, சுரங்க லக்மால், நுவான் பிரதீப். (க)

# 300 பந்துகளை 3 முறை சந்தித்து சண்டிமல் சாதனை

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான டில்லி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் தலைவர் சண்டிமல் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

இந்த ஆண்டிலே அதிகமான தடவைகள் 300 இற்கும் அதிகமான பந்துகளை டெஸ்ட் போட்டிகளில் சந்தித்ததே அந்த சாதனையாகும்.

கொழும்பு SSC மைதானத்தில் இடம்பெற்ற பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் 300 பந்துகளை சந்தித்து 138 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

அதன்பின்னர் பாகிஸ்தானை வெள்ளையடிப்பு செய்த தொடரில் அபுதாபி மைதானத்தில் 372 பந்துகளைச் சந்தித்து 155 ஓட்டங்களை ஆட்டமிழக்காது குவித்திருந்தார்.

நடைபெற்றுவரும் டில்லி டெஸ்ட் போட்டியிலும் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சண்டிமல் மொத்தமாக 361 பந்துகளை சந்தித்து 164 ஓட்டங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சண்டிமல்லை அடுத்து இந்தாண்டில் 3 தடவைகள் 250 இற்கும் அதிகமான பந்துகளை இந்திய வீரர் புஜாரா சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தனது 80 ஆவது இன்னிங்ஸில் பத்தாவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்த சண்டிமல், மத்தியூஸ்டன் இணைந்து நான்காவது விக்கெட்டில் 477 பந்துகளை சந்தித்து 181 ஓட்டங்கள் என்ற இணைப்பாட்டம் புரிவதற்கும் காரணமாகத் திகழ்ந்தார். (க)

# சான்றிதழ் வழங்கல்

கடந்த 29 ஆம் திகதி இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினரால் கொழும்பில் நடத்தப்பட்ட IAAF-technical official educational certification system Level-1 ஆங்கில மொழி மூலமான பரீட்சையில் வடமாகாணத்தைச் சேர்ந்த செ.சதீஸ் குமார், கா.சுதாகரன், ஆ.கம்லக்குமரன், ஆ.மதிவாணன், ஆர்.சிவசேகரன், எஸ்.சுரேந்திரா, கே.மங்களகுமார் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. (க-ஒ)

## ஊக்கமருந்து சர்ச்சை

# 2018 - குளிர்கால ஒலிம்பிக்கில் பங்கேற்க ரஷ்யாவிற்கு தடை

(லோவோசானே)

ஊக்கமருந்து விவகாரத்தில் ரஷ்ய வீரர்கள் சிக்கியதால் 2018 ஆம் ஆண்டு குளிர் கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க ரஷ்யாவிற்கு சர்வதேச ஒலிம்பிக் ஆணையம் தடை விதித்துள்ளது.

ரஷ்யாவில் கடந்த 2014 ஆம் ஆண்டு சோச்சி மாகாணத்தில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடந்தன. இதில் ரஷ்ய வீரர்கள் ஊக்க மருந்து உட்கொண்டதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக அந்நாட்டு ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தது. அதில் வீரர்கள் ஊக்க மருந்து உட்கொண்டது உறுதியாகியுள்ளது.



இந்நிலையில் நேற்று முன்தினம் சர்வதேச ஒலிம்பிக் ஆணையக கூட்டம் நடந்தது. இதில் ரஷ்ய ஊக்க மருந்து தடுப்பு அமைப்பு அளித்த அறிக்கையின்படி ரஷ்ய வீரர், வீராங்கனைகள் தென்கொரியாவின் பையோங்சாங்க் நகரில் 2018 ஆம் ஆண்டு குளிர் கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்படுவதாக அறிவித்தது. (இ)

# டோனியுடன் இணைந்து விளையாடுவது ஸ்பெஷல்

## தமிழக வீரர் சுந்தர்



தல டோனியுடன் இணைந்து விளையாடுவது ஸ்பெஷலாக இருக்கும் என இலங்கைக்கு எதிரான தொடரில் இடம்பிடித்துள்ள வோஷிங்டன் சுந்தர் தெரிவித்தார்.

இந்தியா - இலங்கை இடையிலான இருபது-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடங்குகிறது. மூன்று போட்டிகள் கொண்ட இந்த தொடருக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த 18 வயது சகலதுறை வீரர் வோஷிங்டன் சுந்தர் இடம்பிடித்துள்ளார்.

இதுகுறித்து வோஷிங்டன் சுந்தர் கூறுகையில், எந்தவொரு கிரிக்கெட் வீரரும் டோனியுடன் இணைந்து விளையாட கட்டாயம் விரும்புவார்கள்.

ஐ.பி.எல். தொடரில் அவருடன் சில போட்டிகளில் நான் விளையாடியுள்ளேன். ஆனால், அவருடன் இணைந்து இந்திய அணிக்காக விளையாடுவது மாறுபட்டது. மிகவும் சிறப்பானதாக இருக்கும். இதற்காக காத்துக் கொண்டிருக்கிறேன்.

அவர் எப்போதும் பந்து வீச்சாளர்கள் தங்களது வேலையை சுலபமாக்க உதவியாக இருப்பார். இந்த வேலையை எனக்காகவும் செய்வார்.

அவர் இந்திய அணியில் இருக்கும்போது, நான் அணியில் இடம் பிடித்தது மிகவும் சந்தோசமாக இருக்கிறது எனத் தெரிவித்தார். (இ-7)

# 2-வது முறையாக சேதப்படுத்தப்பட்ட மெஸ்சியின் வெண்கல உருவச்சிலை

காற்பந்து உலகில் ஜாம்பவனாக விளங்கி வரும் ஆர்ஜென்டீனா வீரர் மெஸ்சியின் வெண்கல உருவச்சிலை இரண்டாவது முறையாக சேதப்படுத்தப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டீனா அணித் தலைவர் மெஸ்சி, பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார். இந்த தலைமுறையில் தலை சிறந்த வீரர்களில் ஒருவராக கருதப்படுகிறார். தனது சிறு வயதில் இருந்தே பார்சிலோனா அணிக்காக மெஸ்சி விளையாடி வருகிறார்.

பார்சிலோனா அணிக்காக பல விருதுகளை வாங்கிக் கொடுத்த மெஸ்சி, ஆர்ஜென்டீனா அணிக்காக பெரியளவில் சாதித்தது கிடையாது. 2014ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆர்ஜென்டீனா ஜேர்மனியிடம் தோல்வியடைந்தது.

2015 மற்றும் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற கோபா அமெரிக்கா இறுதிப் போட்டியில் சிலியிடம் தோல்வியடைந்தது.



பார்சிலோனா அணிக்காக சிறப்பாக விளையாடும் மெஸ்சி, தனது சொந்த நாட்டிற்காக சரியாக விளையாடவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. அவருக்கு ஆர்ஜென்டீனாவில் உள்ள பாசியோ டி லா குஸ்ரோரியாவில் கடந்த 2016 ஆம் ஆண்டு வெண்கல உருவச் சிலை நிறுவப்பட்டது.

இந் நிலையில் இவர் மீது கோபம் கொண்ட ரசிகர்கள் கடந்த ஜனவரி மாதம், மெஸ்சியின் சிலையை உடைத்து சேதப்படுத்தினர். பின்னர்



அந்தச் சிலை சீரமைப்பு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் மர்ம நபர்கள் மெஸ்சியின் சிலையின் கையை உடைத்துச் சேதப்படுத்தினர்.

ஒரு வருடத்தில் மெஸ்சியின் சிலை இரண்டு முறை சேதப் படுத்தப்பட்டது அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த ஆண்டு ரஷ்யாவில் நடைபெற இருக்கும் உலகக்கோப்பை போட்டிக்கு ஆர்ஜென்டீனா தகுதி பெறுமா? என்ற நிலை இருந்தது.

ஆனால், கடைசிப் போட்டியில் ஹட்ரிக் கோல் அடித்து ஆர்ஜென்டீனா அணி தகுதி பெற மெஸ்சி முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டில்லியில் அடுத்த 2 ஆண்டுகளுக்கு கிரிக்கெட் போட்டி கிடையாது

## பி.சி.சி.ஐ நிர்வாகி தகவல்

(டில்லி)

2020 ஆம் ஆண்டு தான் இனி டில்லிக்கு சர்வதேச போட்டியை நடத்தும் வாய்ப்பு கிடைக்கும் என்று இந்திய கிரிக்கெட் வாரிய நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

டில்லியில் நிலவும் காற்று மாசுபாட்டினால் தங்களால் இயல்பாக ஆட முடிய வில்லை, சுவாசப் பிரச்சினை ஏற்படுகிறது என்று இலங்கை வீரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்த விவகாரம் சர்ச்சையாக வெடித்துள்ள நிலையில், அடுத்த 2 ஆண்டுக்கு டில்லியில் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடத்தப்படாது என்பது தெரிய வந்துள்ளது.

அதற்கு காரணம், காற்று மாசு கிடையாது. இந்திய கிரிக்கெட் வாரியம் சுழற்சி முறைப்படி தான் ஒவ்வொரு மாநிலத்துக்கும் கிரிக்கெட் போட்டிகளை ஒதுக்குகிறது. அந்த வகையில் இனி 2020 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை டில்லியில் சர்வதேச போட்டிக்கு வாய்ப்பில்லை எனத் தெரியவருகின்றது. (இ-7)

## தமிழரின் ஒற்றுமை...

சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை புதன்கிழமை இடம்பெற்ற அக் கட்சியின் தலைமை குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம், தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் உள்ள ஏனைய அரசியல் கட்சிகளோடு கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு வருகின்றோம். தமிழ்த் தேசிய ஒற்றுமைக்காக பரந்துப்பட்ட ஆதரவுக்காக நாம் தொடர்ந்தும் உழைப்போம். ஆனால் எம்மை அரசியல் ஏமாளிகள் என நினைத்தால் அதனால் ஏற்படும் விளைவுக்களுக்கு அவர்களே பொறுப்பு.

நாம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைக் கழகம், தமிழர் விடுதலை கூட்டணி ஆகியோருடன் பேசியுள்ளோம். மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு பேசவுள்ளோம். எமது நீண்டகால அரசியல் பயணத்தில் இது ஒரு சாதாரண விடயமாகும்.

ஆனால் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தமிழ் தேசியத்தின் ஒற்றுமை என்பது விளையாட்டுப்பந்தாக மாற்றமடைந்துவிடக் கூடாது என்பதை கூறிக்கொள்கின்றோம். இந்த நொடி வரை இதுவே எமது நிலைப்பாடு. ஆனால் எதிர்காலம் குறித்து ஆரூடம் கூற முடியாது என குறிப்பிட்டார். (ம)

## டிப்பர் வாகனம்...

படுகாயமடைந்துள்ளார்.

வீதியால் வந்த கார் ஒன்றைச் சோதனை செய்வதற்காக பொலிஸார் மறித்தபோது அதிலிருந்து இறங்குவதற்காக சாரதி கார் கதவைத்திறந்த வேளையில், அதனை விலத்திச் செல்ல முயற்சித்த தம்பதிகள் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, கணவன் தொடர்ந்தும் சிசிச்சை பெற்றுவருகிறார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-15,29,89)

## எதிர்க்கட்சி தலைவர்...

எதிர்க்கட்சித் தலைவர் பதவி கேள்விக்குறியாகி விடும் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி பிரதீபா மஹனாமஹேவா தெரிவித்துள்ளார்.

இதன்படி, மக்கள் விடுதலை முன்னணி, மகிந்த அணி ஆகியவற்றுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி செல்வதற்கான வாய்ப்பு காணப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக செயற்பட்டு வருகிறது. நாடாளுமன்றத்தில் 16 ஆசனங்களை, கொண்டுள்ள இந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டு வருகின்றார்.

இந்த நிலையில், கூட்டமைப்பிலிருந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் ரெலோ ஆகியன வெளியேறியுள்ள நிலையில், இலங்கைத் தமிழரசு கட்சி மற்றும் புளொட் அமைப்பு ஆகியனவே கூட்டமைப்பில் தற்போது அங்கம் வகிக்கின்றன.

மேலும், இலங்கை தமிழரசுக் கட்சியிலுள்ள சிலர் கட்சித்தாவும் பட்சத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கேள்விக்குறியாகி விடும் என அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அவ்வாறு இல்லையெனில், ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தமிழ் முறபோக்கு கூட்டணி, ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் பட்சத்தில், தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி செல்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.(ம)

## கூட்டமைப்பிலிருந்து...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தமிழர் விடுதலை கூட்டணியின் சின்னமான உதயசூரியனின் சின்னத்தில் வேறு சில கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து போட்டியிட தீர்மானித்துள்ளது. இந்த நிலையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலை தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இருந்து எதிர்கொள்ள போவதில்லை என ரெலோ நேற்றைய தினம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றொரு கட்சியான புளொட்டும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி புதிய கூட்டமைப்பின் கீழ் தேர்தலை எதிர்கொள்வதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக அறிய முடிகின்றது. இது தொடர்பில் ரெலோ மற்றும் புளொட் ஆகியவற்றின் தலைவர்கள் பேசியுள்ளதாக அறிய முடிகின்றது.

மேலும் புளொட்டின் இறுதி முடிவு இன்று அல்லது நாளை அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில் நேற்று இரவும் புளொட் கூட்டமைப்பு கூடி ஆராய்ந்துள்ளது. (ம-4)

## உதயசூரியன் சின்ன...

கூட்டமைப்பில் தமிழர் விடுதலை கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனநாயக தமிழரசுக் கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்), புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள், சமூக சமத்துவத்தினை ஊக்குவிக்கும் பொது அமைப்புக்கள், தமிழர் விடுதலை கூட்டணியின் அலுவலகத்தில் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடி இருந்தன. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தமிழ் மக்கள் தாம் தேர்ந்தெடுத்த பாராளுமன்ற உறுப்பினர்களால் தாம் ஏமாற்றப்படடுக்கொண்டிருக்கும் பொழுது, மக்கள் கொடுத்த ஆணையை மறந்து அரசின் நிகழ்ச்சிநிரல்களை நிறைவேற்றி, உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் அரசைப் பாதுகாக்கும் ஒரு கட்சியாக தமிழரசுக் கட்சி செயற்பட்டுக் கொண்டிருப்பதாலும் சமஷ்டி என்பதற்கு இடமே இல்லை ஒற்றையாட்சிதான் முடிந்த முடிவெனவும் சமஷ்டி கிடையாது எனவும் ஜனாதிபதியும் பிரதமரும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வலியுறுத்திக் கூறிய பிறகும் இடைக்கால அறிக்கை என்பது சமஷ்டியைக் கொண்டது என தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் மத்தியில் தவறான பிரசாரத்தை முன்னெடுத்துக் கொண்டு போகும் நிலையில் அரசியல் சாசன வழி நடத்தல் குழு அமர்வுகள் எழுபத்து மூன்று முறை கூடிய பொழுதிலும் அதில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கு இணைப்பைப் பற்றிபேசாது, வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என்று கூறி வரும் சூழ்நிலையிலும் வடக்கு-கிழக்கு உட்பட முழு இலங்கையிலும் பௌத்தத்திற்கு முதலிடம் என்ற விடயத்தை பாராளு மன்றத்தில் ஏற்றுக்கொண்டு சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ள சூழ்நிலையில், மாற்று அணி ஒன்றின் தேவை மக்களாலும், தமிழ் அரசியல் கட்சிகளாலும் உணரப்பட்டது.

இன்று வெளிப்படையாகவும் பட்டவர்த்தனமாகவும் தமிழரசுக் கட்சி அரசின் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாகவும் குறிப்பாக வடக்கு-கிழக்கை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இராணுவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பல ஆயிரம் கோடி ரூபா பாதுகாப்பு செலவீனத்தை அங்கீகரித்து வாக்களித்தும் ஐ.நா மற்றும் சர்வதேச அரங்குகளிலும் இலங்கை அரசைப் பாதுகாத்தும் ஆளும் ரணில் மைத்திரி அரசிற்குள் பிளவு ஏற்பட்டால் நாம் ஐக்கியதேசியக் கட்சிஆட்சி அமைப்பதற்கு ஆதரவாகச் செயற்படுவோம் என்றுதமிழரசுக் கட்சி வெளிப்படையாக உறுதிமொழி வழங்கியுள்ள சூழ்நிலையிலும் தமிழர் தலைமை என்று சொல்லக்கூடிய தமிழரசுக் கட்சியானது தமிழ் மக்களை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்கிறதா என்ற நியாயமானசந்தேகம் எழுகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி அந்தக் கட்சி சரியான பாதையில் செல்வதற்கு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கடசியைத் தோற்கடிக்க வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைத தோற்கடிப்பதன் மூலமே மக்களின் மன உணர்வுகளை அவர்களுக்குப் புரியவைக்க முடியும் என்பதனால் தமிழர்களின் எதிர்கால நலன் கருதி தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஒரு பலமான பொதுக்கூட்டமைப்பை உருவாக்க வேண் டிய தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

**கொள்கையுடனான ஒற்றுமையே தேவை**

விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்ட நிலையில், தமிழர்களின் ஒருமித்தகுரல் மற்றும் ஒருமித்த போராட்டத்தினூடாகத்தான் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கமுடியும் என்றநிலையில், பல்வேறுபட்ட கட்சிகள் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்தன. ஆனால் தமிழரசுக் கட்சியின் தவறான கொள்கைகளால் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்ன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழர் விடுதலை கூட்டணி போன்ற கட்சிகள் அதிலிருந்து வெளியேறிய நிலையில் கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்தி மிகவும் தவறானதும் பொய்யான முறையிலும் தான் தோன்றித்தனமான முடிவுகளை எடுத்துச் செயற்படுவதால் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை விட்டுக்கொடுக்காத புதியதோர் கூட்டமைப்பு தேவை என்ற அடிப்படையில் ஒத்த கருத்துள்ள பல கட்சிகளும் அமைப்புகளும் கூடி உருவாக்கியது தான் இக்கூட்டமைப்பு ஆகும்.

**புதிய தலைமையில் கைகோர்த்தவர்கள**

இந்த கூட்டமைப்பில் தமிழர் விடுதலை கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனநாயக தமிழரசுக் கட்சி,ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்), புனர்வாழ்வு அளிக்கப்பட்டதமிழ் விடுதலைப் புலிகள், சமூகசமத்துவத்தினை ஊக்கு விக் கும் பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புகளும் இணைந்து போட்டியிட முடிவெடுத்துள்ளன. மாற்றத்தின் அவசியத்தை உணர்ந்து இக்கூட்டமைப்பில் அனைவரையும் இணையுமாறு அழைக்கிறோம்.

**பொதுச் சின்னமாக உதயசூரியன்**

தமிழரின் ஒற்றுமையை வலியுறுத்தி தமிழினத் தலைவர் தந்தை செல்வா உருவாக்கிய தமிழரசுக் கட்சியாலும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸாலும் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலை கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தையே இப்புதிய கூட்டமைப்பு தனது பொதுவான தேர்தல் சின்னமாக ஏற்றுக் கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பித்த பொழுதும் உதயசூரியன் சின்னமே கூட்டமைப்பின் சின்னமாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உட்கட்சி முரண்பாடு காரணமாக இடைப்பட்ட காலத்தில் அது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாக இருந்த பொழுதும் மீண்டும் ஒற்றுமையின் சின்னமாக தமிழ் மக்களின் உரிமைக் குரலை வெளிப்படுத்தும் சின்னமாக தமிழ் மக்களுக்கு ஒரு விடியலை ஏற்படுத்தும் சின்னமாக உதய சூரியனை பொதுச் சின்னமாக நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

**இணைவின் அடிப்படை**

எமது முன்னாள் தலைவர்களால் உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு என்பது தமிழர்களின் வரலாற்றுப் பூர்வமான வாழ்விடமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமைஎன்பது அங்கீகரிக்கப்பட்டு ஒருமித்தநாட்டுக்குள் தமிழர்களுக்கான சுயாட்சி உருவாக்கப் படவேண்டும். அதுவே அவர்களின் பாதுகாப்பையும் தனித்துவத்தையும் உறுதிப்படுத்துவதற்கான ஒரேவழி என்ற அடிப்படையில் இந்தக் கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கையாகவும் நோக்கமாகவும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இந்த அடிப்படையிலேயே எதிர்வரும் உளளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடுவ தெனவும் இக்கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது. எமது கொள்கைகள் மற்றும் நோக்கங்களை ஏற்றுக்கொண்ட சகல அரசியல் கட்சிகளையும் பொது அமைப்புக்களையும் சிவில் அமைப்புக்களையும் எம்முடன் இணைந்து பணி புரியவருமாறு அழைப்பு விடுக்கின்றோம். கடந்தகால முரண்பாடுகளை மறந்து புதிய பாதையில் பயணிக்க வேண்டிய தேவைஎம் எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. இங்கு தமிழர் களின் விடுதலையும் அவர்களின் சமூக பொருளாதார வளர்ச்சியும் பாதுகாப்புமே முதன்மையானது. இதனை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும் எம்முடன் இணைந்து பயணிக்கலாம்.

மாற்றம் என்பது என்றும் நடப்பது எங்கும் நடப்பது. மாற்றம் என்பதுமாறாதது. அந்த அடிப்படையில் தமிழ் மக்களுக்கும் ஒருமாற்றம் தேவை. உரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்க கிராமிய அபிவிருத்திகளை மேற்கொள்ள மாற்றம் என்பது அவசியமாகிறது. அந்த மாற்றத்தை உள்ளூராட்சித் தேர்தல்களிலிருந்து ஆரம்பிப்போம். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் வெற்றிபெறுவதற்காக தமிழீழ விடுதலை இயக்கத்தினரையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரையும் அகில இலங்கை தமிழ் காங்கிரசையும் எமது இக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட வருமாறு அழைக்கின்றோம் என தெரிவித்துள்ளனர். (ம-4)

## தமிழ்க் காங்கிர...

பெயரில் செயற்படவுள்ள இவ் அரசியல் அமைப்பு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் என்றும் அதனைத் தொடர்ந்து எதிர்காலத்தில் தமிழ் தேசியப் பேரவை என்ற பெயரில் இக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு புதிய சின்னத்தை பெற்றுக் கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் வேணவாவை வென்றெடுப்பதையும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி காண்பதையும் இலக்காகக் கொண்டு இந்த அமைப்பு செயற்படும் என்றும் தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்தை வென்றெடுப்பதை முன்னிறுத்தி இப் புதிய கூட்டமைப்பு செயற்படும் என்று அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கூட்டமைப்பின்...

அதன் தலைவர் இரா.சம்பந்தனிற்கு பணித்துள்ளார்.

நேற்று காலை தொலைபேசி வழியே தொடர்புகொண்ட அவர் தற்போதைய பிளவுகள் தொடர்பில் உரையாடியதுடன் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரவும் பணித்துள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளது தலைவர்களது தொலைபேசிகள் செயலிழந்துள்ளதாக ஊடகத்தகவல்கள் தெரிவிக்கின்றன. முக்கியமாக செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்த்தன் ஆகிய இருவரதும் தொலைபேசிகளே செயலிழந்துள்ளன. (ம)

## தமிழருக்கு சார்பாக...

சாட்டியுள்ளது. அதேபோல இந்த வழக்கில தொடர்புடையவராக மற்றும் பீல்ட் மார்ஷல் சரத்பொன் சேகாவிடம் அடைக்கலம் பெற்று வரும் நேவி சம்பத் என்பவரை கைது செய்வதற்கான உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டும் என்றும் தாய்நாட்டிற்கான இராணுவ அமைப்பின் இணைப்பாளர் சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்ன கோரிக்கை விடுத்தார்.

2012ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் தெஹிவளை பகுதியில் வைத்து 11 தமிழர்கள் வெள்ளை வானில் கடத்திச்செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இன்றைய தினமும் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய தாய்நாட்டிற்கான இராணுவம் என்ற அமைப்பு, இந்த வழக்கு விசாரணையின்போது சந்தேக நபர்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் கடற்படையின் புலனாய்வு உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக குற்றம் சுமத்தியது. (ம)

## பங்காளி கட்சியுடன்...

கூட்டமைப்பின் உள் முரண்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாடுகளை எட்டுவதற்கு பங்காளி கட்சிகளிடையே சம்பந்தன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார். மேலும் சில நாடுகளின் தூதரகங்களும் பங்காளி கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளன.

தமிழரசு கட்சி சர்வாதிகாரத்துடன் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ் வெளியேறியிருந்தது. இதனை தொடர்ந்து ரெலோவும் உள்ளூராட்சி தேர்தலை தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்து எதிர்கொள்ள போவதில்லை என அறிவித்துள்ளது. அதனை தொடர்ந்து புளொட்டும் வெளியேறுவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றது.

இந்த நிலையில், குறித்த இரு கட்சிகளும் வெளியேறி விட்டால் சம்பந்தனின் எதிர்க் கட்சி தலைவர் பதவி பறிபோகும் நிலைக்கு சென்று விடும். எனவே குறித்த கட்சிகள் கோரும் சபைகளை கையளித்து சுமுகமான நிலையை எட்டுமாறு தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அறிவித்துள்ளதாக அறிய முடிகின்றது. மேலும் ரெலோவின் தலைமை பீடத்துடனும் சம்பந்தன் நேற்றைய தினம் பேசியுள்ளதாக அறிய முடிகின்றது.

இதனை தொடர்ந்து கூட்டமைப்பிலிருந்து கட்சிகள் வெளியேறுவது தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படலாம் என நம்பப்படுகின்றது. மேலும் கூட்டமைப்பு தற்போது உடைவது பொருத்தமல்ல எனவும், தென்னிலங்கையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்திவிடும் என்பதால் இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கவனம் செலுத்தியுள்ளதாக அறிய முடிகின்றது.

மேலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கீழ் உள்ளூராட்சி சபை தேர்தலை எதிர்கொள்ள போவதில்லை என அறிவித்துள்ள ரெலோ, யாருடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்ள போகின்றோம் என்று அறிவிக்கவில்லை. அதேபோன்று புளொட்டும் அமைதி காத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-560)
UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வருட இறுதிமெகா சேல்!!
அனைத்து தளபாடங்களுக்கும்
மாபெரும் விலைக்கழிவு!!
ஏசியன் தளபாடத்தில்!
தொடர்புகளுக்கு :
076 821 9415
(C-606)

## மனைவியை எரி...

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணின் கணவர் அந்தோனிமுத்து ஞானதாஸ் (வயது-25) கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் சுருக்க முறையற்ற விசாரணைகள் இடம்பெற்றன. அதன் நிறைவில் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப் பட்டார்.

இந்தநிலையில் மனைவியின் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்துக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டை முன் வைத்து சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்கு மீதான விளக்கம் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று தீர்ப்புக்காக திகதியிடப்பட்டிருந்தது.

வழக்கின் எதிரி கொலை செய்யும் நோக்கத்தோடு திட்டமிட்டு அவரது மனைவி மீது தீப்பற்றவைத்தார் என்பது வழக்குத் தொடுனரால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை.

எதிரி கைமோசக்கொலைக் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்ற முடிவுக்கு இந்த மன்று வருகிறது. அந்தக் குற்றத்துக்காக எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது.

அத்துடன், குற்றவாளி 5 ஆயிரம் ரூபாய் தண்டம் பணம் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (ம)

## யாழ்ப்பாண பல்...

பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்படும் என யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசியர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்

யாழ். பல்கலைக் கழகத்தின் 33-வது பட்டமளிப்பு விழா தொடர்பான விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 33-வது பொதுப் பட்டமளிப்பு விழா இம்முறை இரண்டு பகுதிகளாக நடத்தப்படவுள்ளன. முதலாவது பகுதி எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 5 அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இந்த பட்டமளிப்பு விழாவில் உயர் பட்டப் படிப்புகள் பீடம், முகாமைத்துவ வணிக பீடம், கலைப்பீட சட்டத்துறை, விவசாய பீடம், மருத்துவ பீடத்தின் இணை மருத்துவ அலகு, சித்த மருத்துவத் துறை, வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம், வணிக கற்கைகள் பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 816 பட்டதாரிகள் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

கலைப்பீட சட்டத்துறையைச் சேர்ந்த 63 பேர் சட்டமாணி பட்டத்தையும், விவசாய பீடத்தைச் சேர்ந்த 53 பேர் விவசாய விஞ்ஞான மாணி பட்டத்தையும், வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 84 பேர் இளமாணி, விஞ்ஞான மாணி பட்டத்தையும், வணிக கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 110 பேர் வியாபார முகாமைத்துவ மாணி பட்டத்தையும், மருத்துவ பீடத்தில் 58 பேர் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான மாணி, தாதியல் விஞ்ஞானமாணி, மருந்தகவியல் ஆகிய பட்டத்தையும், பட்டப்படிப்புக்களின் தகைமைகளை 60 பேரும், முகாமைத்துவ வணிக பீடத்தைச் சேர்ந்த 341 பேர் வியாபார நிர்வாக மாணி, வர்த்தக மாணி பட்டங்கள்ளையும், சித்த மருத்துவதுறையில் 32 பேர் சித்தவைத்திய சத்திர சிகிச்சை மாணி பட்டத்தையும், ஆங்கிலம் கற்பிப்பதற்கான பட்டப்படிப்பின் டிப்ளோமா 5 பேரும், ஆங்கிலம் மற்றும் வியாபார நிர்வாகத்தில் தகைமைச்சான்றிதழ்களை 10 பேரும பெறவுள்ளனர்.

2018, மார்ச் மாதம் நடைபெறவுள்ள 33 ஆவது பொது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியில் விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம், மருத்துவ பீடம், கலைப்பீடம், மற்றும் உயர்பட்டப் படிப்புகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளதுடன், வெளிவாரியாகப் பட்டம் பெறுபவர்களின் பட்டங்களும் உறுதிப்படுத்தப்படவுள்ளன

நாளை 8 ஆம் திகதி நடைபெறும் முதலாம் பகுதியின் ஐந்து அமர்வுகளில் முதலாம் அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாவது அமர்வு காலை 10.45க்கும், மூன்றாவது அமர்வு மதியம் 1.15க்கும், நான்காவது அமர்வு பி.ப 3 மணிக்கும், ஐந்தாவது அமர்வு 4.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன.

அதனை தொடர்ந்து எதிர்வரும் 9 ஆம் திகதி கலைப்பீட இசை, நடனத் துறை இணைந்து பங்குபற்றும் பட்டமளிப்பு கலாசார நிகழ்வு மாலை 5.30 தொடக்கம் 7.30 வரை கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

வேலைவாய்ப்பு
கல்வி நிறுவனம் ஒன்றுக்கு
அலுவலக உதவியாளர் (Female)
தேவை. நேரில் வரவும்.
தொடர்பு: கோலா சிற்றி
இல.234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0213202787
(1616)

45-வது வருடத்தை நோக்கி...
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
தொ.பே. இல.: 0776629137
புதிய கல்வியாண்டு - 2018
தரம் 6 - O/L வரை தனித்துவம் வாய்ந்த
ஒரே நிறுவனம்
தூரதேச மாணவர்கள் நலன் கருதி
மாணவர்கள் நலன் கருதி
கல்வியாண்டு 2018 தரம் 6 - O/L வரை
பிரிவு I சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் : 09.12.2017 நாள் வகுப்பு 11 மணி
(8மணி - 2மணி)
● பாடசாலை விடுமுறை நாட்களில் 8 - 2 மணி வரை நடைபெறும்.
● யாழில் முதன்முதல் ஆரம்பமாகி பல கல்விமான்களை உருவாக்கிய பெருமை சார் நிறுவனம்.
● தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாமினால் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் நிறுவனம்.
(சி-613) -நிர்வாகி

எவரெஸ்ட் குமாரிக்கா
சந்தனாதி தைலம்
■ நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
■ இளநரையை போக்கவும்
■ பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
■ கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
■ ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
■ ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்
100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங்கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571
(C-1394)

30-வது வருட கல்விச் சேவையில்
யாழ். நகரின் No.1 கல்வி நிறுவனம்
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
சிறப்பான ஆரம்பத்துடன்...
புதிய கல்வியாண்டு - 2018
அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க
புதிய கல்வியாண்டில் மீண்டும் ஒரு சாதனையை
ஏற்படுத்த மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.
தமிழ் மொழி மூல வகுப்புக்கள்
தரம் 6 முதல் O/L வரை
ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்
யாழ்.நகரின் பிரபல பாடசாலை ஆசிரியர்களும் சிரேஷ்ட
ஆசிரியர்களும் ஒருங்கிணைந்த சேவை. வெற்றிக்கு வித்து
ஆரம்ப கல்விப் பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை
தரம் 5 புலமைப்பரிசில் - 2018 மாணவர்களுக்கான
வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும்
ஆரம்பம் : 09.12.2017 - சனிக்கிழமை மாலை 4.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
தொடர்பு: 077 459 8440
(சி-617)

அன்பொளி கல்வியகம்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்.
2018 இல் தரம் 1, 2, 3, 4
மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
காலம் : 09.12.2017 சனிக்கிழமை
அனுமதியையும் நேர அட்டவணையும் முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும்.
சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்
(சி-611)

VICTORY IN MATHS
K.K.S Road, Jaffna.
Mathematics
Group Classes
தரம் 6 - 11 வரை
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
ஆரம்பம் : 09.12.2017,
பிற்பகல் 4.30 மணி
ஆசிரியர்கள்
R.S.மயூரன் (யாழ்.இந்துக் கல்லூரி) 0776727941
A.S.ரஜீவ் (கொக்குவில் இந்துக் கல்லூரி) 0779000982
P.R.கயூரன் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) 0774914332
(5036)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.